RE/MAX BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 30 டிசம்பர் 2022 இதழ்:- 36

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

# இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

## பேச்சுவார்த்தைகள் தொடர்பில் சீனாவின் நிலைப்பாடு என்ன? யாழ்ப்பாணப் பிரமுகர்கள் கேள்வி! பதிலளிக்க மறுத்த சீன அதிகாரி!



நாம் இந்தியாவின் கலாச்சாரத்தை ஒத்தவர்கள் என்பதனால் அதனை நாம் நாடி நிற்பது குறித்து சீனா அஞ்ச வேண்டிய தேவை கிடையாது என சீனத் துணைத் தூதுவரிடம் யாழ்ப்பாணப் பிரமுகர் ஒருவர் எடுத்துரைத்தார். இந்தியா குறிப்பாக தமிழக மக்களுக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் உள்ள தொப்புள் கொடி உறவைத் தாங்கள் புரிந்து(3ம் பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் வெடித்த குழப்பம்! காரசாரமான வாக்குவாதங்களின் பின் முடிவின்றி முடிந்தது கூட்டம்!



தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியாக, ஒற்றுமையாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் இரு வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றமையால் அது தொடர்பில் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இறுதி முடிவெடுப்பது என்று அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் (7ம்பக்கம் பார்க்க)

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Super Visa Insurance 100% Refund
Dir: 416 528 1407
www.gtbrokers.ca

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## வியட்நாமில் இருந்து இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களம், குடிவரவு அதிகாரிகளால் விசாரணை



இலங்கை பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்ட நிலையில், நாட்டை விட்டு வெளியேறி, சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக கனடா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தருணத்தில், வியட்நாமில் மீட்கப்பட்ட இலங்கையர்களில் 151 பேர் மீண்டும் தாயகம் சென்றுள்ளனர். வியட்நாமிலிருந்து விசேட விமானத்தின் மூலம் நாட்டிற்கு அழைத்து செல்லப்பட்ட இவர்கள், 28 டிசம்பர் 2022 புதன் கிழமை அதிகாலையில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தனர். (8ம் பக்கம் பார்க்க)

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



20 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS


Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

WISHING YOU AND YOUR FAMILY A JOYFUL
## Holiday Season and a Prosperous year 2023

**Thank you** to all of my clients, family, and friends for trusting me with your Real Estate needs during the last 20 years.

*I hope to continue working with you in the future.*


**Mississauga /Sandalwood**

**Brampton** **$677,000**
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Kitchen

**Dixie & Clark**


**Brampton** **$539,900**
Bedrooms: 3 Washrooms: 2
Beautiful Corner Unit! Upgraded

**Sheppard & Warden**


**Scarborough** **$595,900**
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony

**Mccowan/Hwy 401**

**Scarborough** **$599,900**
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Suite, Laminate Fl

**Eglinton & Mccowan**


**Scarborough** **$620,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Location Location Location!!!

**Birchmount & Enterprise**

**Markham** **$699,900**
Bedrooms: 1+1 Washrooms: 1
Modern Open Concept Kitchen

**Sandalwood Pkwy/Hurontario**


**Brampton** **$839,000**
Bedrooms: 3 Washrooms: 2
Location Location

**Simco St N/ Darcy**

**Oshawa** **$998,000**
Bedrooms: 3+1 Washrooms: 4
Fully Renovated Home

**Williams Pkwy/James Potter**

**Brampton** **$1,699,900**
Bedrooms: 4+2 Washrooms: 4
Upgraded Large Kitchen

**Markham & Major Mackenzie**

**Markham** **$1,649,000**
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx 3,450 Of Living Space

**Salem / Taunton**


**Ajax** **$1,189,800**
Bedrooms: 4+1 Washrooms: 4
Location Location Location!

**Don Mills/Eglinton**


**Scarborough** **$549,900**
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# யாழ்ப்பாணத்திற்கு "பட்டு வேட்டி"யுடன் சென்ற சீனத் தூதரக அதிகாரி! பேச்சுவார்த்தைகள் தொடர்பில் சீனாவின் நிலைப்பாடு என்ன? யாழ்ப்பாணப் பிரமுகர்கள் கேள்வி! பதிலளிக்க மறுத்த சீன அதிகாரி!



நாம் இந்தியாவின் கலாச்சாரத்தை ஒத்த வர்கள் என்பதனால் அதனை நாம் நாடி நிற்பது குறித்து சீனா அஞ்ச வேண் டிய தேவை கிடையாது என சீனத் துணைத் தூதுவரிடம் யாழ்ப்பாணப் பிரமுகர் ஒருவர் எடுத்துரைத்தார்.

இந்தியா குறிப்பாக தமிழக மக்களுக் கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் உள்ள தொப்புள் கொடி உறவைத் தாங் கள் புரிந்து கொள்கிறார்கள் என சீனத் தூதுவர் பதிலளித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு 28 டிசம்பர் 2022 புதன்கிழமை மாலை வந்த சீனாவின் துணைத் தூதுவரையும் குழுவினரை யும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரமுகர் குழு ஒன்று இரவு ஓர் விடுதியில் சந்தித் தனர். இதன் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதே நேரம் போரின் போது பாதிக்கப் பட்ட தரப்புடன் அன்றி, பாதிப்பை ஏற் படுத்திய தரப்புடனேயே சீனா நின்றமை வருத்தமளிக்கின்றது என்பது பிரமுகர் கள் தரப்பில் கூறப்பட்டது.

இறுதிப் போரின் போது சீனா மட்டு மல்ல, இந்தியா, அமெரிக்கா உட்பட பல நாடுகள் இலங்கை அரசிற்கு உதவி யமையும் எமக்குத் தெரியும். ஆனால் மற்ற நாடுகள் தற்போதேனும் தங்களை மாற்றிக் கொண்டாலும் சீனா இன்று வரை அதனை மாற்றவோ அல்லது பாதிப்புற்றோர் தரப்பைப் பரிவுடன் அணுகவோ தயார் இல்லை.

இதே நேரம் எமக்காக குரல் கொடுக்க முடியாது. நாம் அரசிற்கு அரசு என்ற ரீதியில் தான் செயற்பட முடியும் என சீனா கருதினால், தற்போது இலங்கை அரசிற்கும் தமிழர் தரப்பிற்கும் இடை யில் ஒரு பேச்சுவார்த்தை ஏற்பாடு இடம் பெறுகின்றது. அந்தப் பேச்சுவார்த்தை யாவது வெற்றியளிக்க வேண்டும் என்று ஒரு வாழ்த்து அறிக்கையையாவது சீனாவால் வெளியிட முடியுமா? எனக் கேட்டபோதும் சீன அதிகாரிகள் அதற் கும் மறுத்து விட்டனர்.


இது இவ்வாறிருக்க சீன தூதரகத்தின் அதிகாரி ஒருவர் தமிழர்களின் கலாசார உடையான பட்டு வேட்டியுடன் யாழ்ப் பாணத்திற்கு சென்றிருந்தது அங்கிருப் பவர்களை கவர்ந்தது. குறித்த விஜயம் சுற்றுலா ரீதியானது என தெரிவிக்கப்படு கின்ற நிலையில் கோட்டை பொறுப்பான அலுவலர்களோ உத்தியோகஸ்தர்களோ பிரசன்னமாகி இருக்கவில்லை.

இதன் போது கோட்டை தொடர்பான விடயங்களை அங்கிருந்தவர்களிடம் கேட்டறிந்து கொண்டனர். இதனால் அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டு பொலிசார் கடமையில் ஈடுபட்டி ருந்தனர்.

யாழ்ப்பாணக் கோட்டைக்கு இலங்கைக் கான சீன தூதரகத்தின் பிரதித் தூதர் ஹ வெய், சீனத்துதரக அரசியல் விவகார அதிகாரி லியோ சொங் உள்ளிட்ட மூவர் குழுவினரே குறித்த விஜயத்தில் ஈடு பட்டனர்.

இதன் போது அக்குழுவில் அடங்கிய பிரதிநிதி ஒருவரே இவ்வாறு பட்டு வேட்டியுடன் வருகை தந்திருந்தார். கடந்த காலத்தில் நல்லூர் ஆலயத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான சீன தூதர் உள்ளிட்ட குழுவினர் பட்டு வேட்டியுடன் சென்றிருந்தமை குறிப்பிட த்தக்கது.

# சஹ்ரானுக்கு உதவியவர் தமிழகத்தில் கைது



ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்கு தலின் பிரதான சந்தேகநபரான சஹ்ரான் ஹஷீமுடன் தொடர்பில் இருந்த நபர் ஒருவர் தமிழகத்தில் கைது செய்யப் பட்டுள்ளார்.

குறித்த நபரை இந்திய தேசிய புலனாய்வு முகமையினர் 28.12.22 கைது செய்துள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தகவலை இந்திய தேசிய புலனாய்வு முகவரகம் (NIA) உறுதிப்படுத்தியுள் ளது.

கடந்த ஒக்டோபர் 23ஆம் திகதி இந்தியாவின் கோயம்புத்தூரில் காரை வெடிக்க வைத்து தகர்த்த சம்பவத்து டன் ஐஎஸ் அமைப்பைச் சேர்ந்த குறி த்த சந்தேகநபருக்கு நேரடித் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது.

இலங்கையில் ஈஸ்டர் ஞாயிறு பயங்கர வாதத் தாக்குதலின் பிரதான சந்தேக நபருடன் தொடர்பு கொண்டிருந்த ஐ.எஸ் உறுப்பினர் ஒருவரே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதன்படி, தேசிய புலனாய்வு முகமை குறித்த சந்தேக நபரை கைது செய்து ள்ளதுடன், சம்பவம் தொடர்பில் சனோபர் அலி என்ற நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் பிரதான சந்தேகநபரான சஹ்ரான் ஹஷீமுடன் இவர்கள் நேரடித் தொடர்பு வைத்திருந்ததாக முதல்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா:- 23 ஏப்ரல் 2023 "சங்கீத சங்கமம் 2023"**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# யாழ்ப்பாணத்தில் அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய நிதித்துறை வலையமைப்பைக் கொண்டிருந்த ஈழத்தமிழரான ராஜ்.ராஜரத்தினம்

அமெரிக்காவின் மிகப்பெரிய நிதித்துறை வர்த்தக வலயத்தின் நிறுவுனரான ஈழத்தமிழர் ராஜ் ராஜரத்தினம் அவர்கள் சிறிலங்காவின் முக்கிய அரசியல்வாதிகளை சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹெட்ஜ்-நிதி நிறுவனத ின் நிறுவுனரான ராஜ் ராஜரத்தினம் என்பவரே இவ்வாறு அரசியல்வாதிகளை சந்திக்க வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவர் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று அதன் செயற்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்துள்ளார்.

இது தொடர்பில் மேலம் தெரிய வருகையில், அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய ஹெட்ஜ்-நிதி, உள் வர்த்தக வலயங்களின் பிரதான வகிபாகத்தை கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படும் இலங்கையில் பிறந்த கேலியன் ஹெட்ஜ் நிதி நிறுவுனர் ராஜ் ராஜரத்தினம் தற்போது சிறிலங்கா சென்றுள்ளார்.

அவர் எதிர்வரும் நாட்களில் சிறிலங்கா அரசியல்வாதிகள் சிலரை சந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர் 2009ஆம் ஆண்டில், உள் வர்த்தகப் பத்திர மோசடிகளில் குற்றவியல் குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்.

சில வருடங்கள் சிறைப்படுத்தலின் பின்னர் விடுவிக்கப்பட்டார். எனினும் தாம் குற்றமற்றவர் என்று கூறி அவர் அண்மையில் ‘சீரற்ற நீதி’ (**uneven Justice**) என்ற நூலை வெளியிட்டிருந்தார்.

இதேவேளை தமிழர் புனர்வாழ்வு அமைப்புக்கு 3.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. 2006 ஆம் ஆண்டு மத்திய வங்கியின் அதிகாரம் இன்றி கிருலப்பனையில் உள்ள ஸ்டாண்டர்ட் சார்ட் வங்கிக் கிளையில் வைப்பு செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய மூன்று மில்லியன் அமெரிக்க டொலர் பணத்துடன் ராஜரத்தினம் தொடர்புபட்டிருந்தார் என்றும் கூறப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் பெயர் இந்த சட்டவிரோத கொடுக்கல் வாங்கலில் இணைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து 2015 ஆம் ஆண்டு, பரிவர்த்தனை கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறி பணச் சலவை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கருணாநாயக்க பின்னர் விடுவிக்கப்பட்டார்.



# 31 தமிழ் அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்ய வேண்டும் ஜனாதிபதியுடன் உடன்படும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ


சிறைச்சாலைகளில் தற்போது உள்ள31 தமிழ் அரசியல் கைதிகளும் விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும்’ என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, ’அரசியல் தீர்வு காண்பதற்கு முன்னர் தமிழ் மக்களின் பிரச்சினை களைத் தீர்க்க வேண்டும் என்ற அதிபர் ரணில் விக்ரமசிங்கவின் கருத்துடன் நான் உடன்படுகின்றேன்.

காணி விவகாரமும், அரசியல் கைதிகள் விடயமும் அவற்றில் முக்கியம் பெறுகின்றன. சிறைகளில் தற்போது தமிழ் அரசியல் கைதிகள் 31 பேர் உள்ளனர் என்று நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். அவற்றில் குற்றம் நிரூபிக்கப்பட்ட 15 பேரையும் பாதிக்கப்பட்ட தரப்புக்களுடன் பேசி பொதுமன்னிப்பில் அதிபரால் விரைவாக விடுவிக்க முடியும்.

குற்றஞ் சாட்டப்பட்ட ஏனைய 16 பேர் மீதான வழக்கு விசாரணையைத் துரிதபபடுத்தி அவர்களையும் ஏதோவொரு வழியில் விரைந்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நாம் எந்த எதிர்ப்புக்களையும் வெளிப்படுத்த மாட்டோம்’ என்றார்.

இதேவேளை சிறு குற்றங்கள் தொடர்பான சந்தேக நபர்களை சிறைப்படுத்துவதற்கு பதிலாக அவர்களின் பெற்றோர் அல்லது வேறு பொறுப்பாளர்களின் கீழ் வீட்டுக்காவலில் தடுத்து வைப்பதற்கு தேவையான சட்டம் கொண்டு வர நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இவ்வாறான சந்தேக நபர்கள் சிறைச்சாலைக்குள் பல்வேறு நபர்களுடன் பழகி, மோசமான குற்றவாளிகளாக மாறி சமூகமயமாவதாக தகவல் வெளியாகி இருப்பதால் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கின்றோம் என நீதி, சிறைச்சாலை நடவடிக்கை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ் தெரிவித்தார். சிறைகளில் இருக்கும் இருக்கும் நோய்வாய்ப்பட்டவர்கள், வயது முதிந்தவர்கள் மற்றும் வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட கைதிகள் இனம் காணப்பட்டு, சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டிருக்கும் விசேட குழுவின் பரிந்துரைக்கமைய விடுதலை செய்யப்படுவர்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

கனடா முத்துமாரியம்மன்

அங்கத்துவர்களுக்கான வருடாந்த மகாசபை கூட்டம்.

22 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடா முத்துமாரியம்மன் கலாச்சார மண்டபத்தில் மாலை 2.00 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.அங்கத்தவர்கள் அனைவரும் மாதாந்த சந்தா பணத்தை செலுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

31டிசம்பர் 2022 சனிக்கிழமை இரவு 12.00 மணிக்கு விஷேட பூஜை

ஆங்கில புத்தாண்டு பூஜை 2023.

01ஜனவரி 2023 ஆங்கில புத்தாண்டு ஞாயிறுக்கிழமை ஆலயம் காலையிருந்து இரவு வரை திறந்திருக்கும்.

காலை 11.00 மணிக்கு விஷேட பூஜை ஆரம்பம்.

விநாயகர், அம்பாள், முருகன் வீதி உலாவருதல்

பூஜை உபயகாரர் அ. ஸ்ரீதரன் குடும்பம்.

அன்னதானம் உபயகாரர்: அ.ரகுராம் குடும்பம்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# அரசுடனான பேச்சுவார்த்தையில் இந்தியாவின் பங்களிப்பு தொடரும் - சம்பந்தர்

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின் போது இந்தியாவின் பங்களிப்பு தொடரும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின் போது இந்தியாவின் மத்தியஸ்தம் அல்லது மேற்பார்வை அவசியம் என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மற்றும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திய விக்கினேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டவர்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் அபிலாஷைகளை பெற்றுக் கொள்வதற்கான பயணத்தில் இந்தியாவின் வகிபாகம் மிகவும் முக்கியமானது. இலங்கையில் தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் அத்தனை விடயங்களையும் இந்தியா நன்கு அறிந்துள்ளது.

குறிப்பாக, 1983ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களின் விவகாரம் சம்பந்தமாக இந்தியா விசேடமாக கரிசனை கொண்டிருக்கின்றது. இதன் காரணமாகவே 1987ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தமானது கைச்சாத்திடப்பட்டது.

அதன் பின்னரான காலத்திலும், தமிழ் மக்களின் விவகாரங்களில் இந்தியா முழுமையான பங்களிப்பினை செய்தே வந்துள்ளது. இந்நிலையில் தற்போது இந்தியாவின் பங்களிப்பினை புதிதாக கோர வேண்டியதில்லை.



தற்போது தமிழர் தரப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகளின் போதும் இந்தியாவின் வகிபாகம் நிச்சயமாக இருக்கும். தற்போதைய சூழலில் அந்த வகிபாகம் எவ்வாறானது என்று வரையறுக்கப்படாவிட்டாலும், நிச்சயமாக இந்தியா தனது பாத்திரத்தினை முக்கியமானதாக வகிக்கவுள்ளது.

அந்த வகையில், தமிழ் மக்கள் தமது நியாயமான அபிலாஷைகளை பெற்றுக்கொள்வதற்கு இந்தியா நிச்சயமாக தனது பங்களிப்பை பூரணமாகவும் அர்ப்பணிப்புடனும் வழங்கும் என்றார்.

# ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான அமெரிக்காவின் தடைக்கு எதுவுமே செய்ய முடியாது கையை விரித்தார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



இலங்கை இராணுவ அதிகாரிக்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதித்துள்ளமை தொடர்பில் இலங்கை அமெரிக்காவுடன் மோதல் போக்கை கடைப்பிடிக்காது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இதனை மோர்னிங்கிற்கு தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் கீத் நொயர் சித்திரவதை செய்யப்பட்டமை தொடர்பில் மேஜர் பிரபாத் புலத்வத்தைக்கு எதிராக அமெரிக்கா தடைகளை அறிவித்துள்ளமை தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மோர்னிங்கிற்கு இதனை தெரிவித்துள்ளார்.

இது அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சுயாதீனமான நடவடிக்கை இலங்கை அரசாங்கம் கரிசனைகளை வெளியிடும் ஆனால் தனிப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் எதனையும் தெரிவிக்காது என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது சுயாதீனமான செயற்பாடு அவர்கள் இவ்வாறான விடயங்கள் குறித்து ஆராய்வதற்கான சுயாதீன வழிமுறைகளை கொண்டுள்ளனர். இது தொடர்பில் நாங்கள் செய்யக்கூடியது எதுவுமில்லை என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் எங்கள் கரிசனைகளை வெளியிடுவோம் ஆனால் தனிப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் எதனையும் தெரிவிக்க மாட்டோம், என குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் நாங்கள் தொடர்ந்து எங்கள் நிலைப்பாட்டை முன்வைப்போம் ஆனால் எங்களால் எதனையும் செய்ய முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

# கோட்டாபாய குடும்பத்தோடு அமெரிக்கா பயணம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் ஐவர் 26 டிச்பர் 2022 திங்கட்கிழமை அமெரிக்காவிற்கு பயணமானார்கள். கோத்தபாய ராஜபக்ச, மனைவி அயோமா ராஜபக்ஷ, மகன் தமிந்த மனோஜ் ராஜபக்ஷ, மருமகள்மற்றும் பேத்தி ஆகியோர் அதிகாலை 02.55 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து எமிரேட்ஸ் விமானத்தில் சிறப்பு விருந்தினர் அறையின் ஊடாக புறப்பட்டுள்ளனர்.

இக் குழுவினர் முதலில் துபாய் சென்று பின்னர் அமெரிக்கா செல்வதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அமெரிக்காவிற்கு நேரடி விமானங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமெரிக்கா செல்லும் முடிவை மாற்றியுள்ள கோட்டாபய ராஜபக்ச, டுபாயில் தங்கியிருக்க திட்டமிட்டுள்ளதாக முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்சவின் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டார, முன்னணி சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். முன்னாள் அதிபர் மற்றும் அவரது குடும்பத்தினர் வெளிநாட்டு சுற்றுலா சென்றுள்ளதாகவும் உள்ளக தகவல் ஒன்று குறிப்பிடுகின்றன. .



உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:- 23 ஏப்ரல் 2023
"சங்கீத சங்கமம் 2023"

# பேச்சுவார்த்தையில் தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள்?

ரணில் விக்கிரமசிங்க ஏற்றி வைத்த பேச்சு தீபம் கொழுந்து விட்டெரிகின்றது. உண்மையில், இந்தத் தீபம் தமிழர் வாழ்வில் ஒளியேற்றுமா அல்லது இருப்பதையும் எரித்துவிடுமா என்பதில் ,ன்னும் தெளிவில்லை. ஆனால், தமிழ் சூழலிலோ பேச்சை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும். அதில் எவரெல்லாம் பங்கு கொள்ள வேண்டும் என்றவாறான விவாதங்கள் சூடு பிடித்திருக்கின்றன. இந்த நிலையில், அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கிவரும் அமெரிக்க செயல்பாட்டுக் குழு (USTAG) அரசாங்கத்துடனான பேச்சில் தங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று கோரியிருக்கின்றது.

இது தொடர்பில் குறித்த அமைப்பின் பிரதிநிதியொருவர் வேண்டுகோள் கடிதத்தை சம்பந்தனிடம் நேரில் கையளித்திருக்கின்றார். இதன் மூலம் கூட்டமைப்பின் அணுகுமுறை சரியென்று அமெரிக்க செயல்பாட்டுக் குழு ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதைத் தொடர்ந்து, கோட்டாபயவால் தடை செய்யப்பட்ட முன்னணி தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடையை விலக்கினார். அத்துடன், புலம்பெயர் அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றவுள்ளதாகவும் அதனை இலகுவாக்கும் நோக்கில் புலம்பெயர் அலுவலகம் ஒன்றை உருவாக்கவுள்ளதாகவும் அறிவித்திருந்தார். இதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவதில் புலம்பெயர் சமூகத்துக்கு ஒரு பிரதான பங்குண்டு என்பதை ரணில் ஒப்புக்கொண்டார்.

அது வெறுமனே தமிழர்கள் மட்டுமல்ல. இந்த பின்னணியிலேயே, தங்களுடைய நிபந்தனைகளை பூர்த்தி செய்தால், தங்களுடைய பங்களிப்பை வழங்குவதற்கு தயாராகவுள்ளதாகவும் அதற்கு முன் நிபந்தனையாக அனைத்து தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள்மீதான தடையை அரசாங்கம் நீக்க வேண்டுமென்றும் அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கி வரும் தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் அறிக்கையொன்றின் மூலம் கோரியிருந்தன. ஆனாலும் இன்றுவரையில் அந்த நிபந்தனைகளை ரணில் பூர்த்திசெய்யவில்லை.

அவ்வாறான கோரிக்கையை முன்வைத்த அமைப்புக்களில் அமெரிக்க செயல்பாட்டுக் குழுவும் ஒன்றாகும். இந்த நிலையில் சில அமைப்புக்கள் மற்றும் பல தனிநபர்கள் மீதான தடை நடைமுறையில் இருக்கின்ற போதிலும், அரசாங்கத்துடனான பேச்சில் தாமும் பங்கு கொள்ள வேண்டுமென்று குறித்த அமைப்பு வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

அரசாங்கத்துக்கும் தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் இடையிலான (பிரதானமாக கூட்டமைப்பு) பேச்சு என்பது அரசாங்கத்துக்கும் மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சு என்னும், அடிப்படையில் தான் இதுவரையில் இடம் பெற்றிருக்கின்றது. அவ்வாறு தான் இப்போதும் இ,டம் பெறுகின்றது. ,இந்த நிலையில் வேறு நாடுகளில் வாழும் நபர்கள் எந்த அடிப்படையில் ஓர் உத்தியோகபூர்வ பேச்சில் பங்குகொள்ள முடியுமென்பது கேள்விக்குறியாகும்.

ஏனெனில் அது நடைமுறையில் மிகவும் சிக்கலானது. மேலும் இவ்வாறான அமைப்புக்கள் தமிழ்பிரதிநிதிகளுடன் தான் உரிமையுடன் ஊடாட முடியுமே தவிர, அரசாங்கத்துடன் அல்ல. ஆனாலும், தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் ரணில் – மைத்திரி காலத்தில் அரசாங்கத்துடன் நெருங்கிச் செயல்பட்டிருக்கின்றன.

உலகத் தமிழர் பேரவை, கனடிய தமிழர் பேரவை போன்ற முன்னணி அமைப்புக்கள், ரணில் மைத்திரி அரசாங்கத்தின் புதிய அரசியல் யாப்பு விடயத்தில் அரசாங்கத்துடனும் கூட்டமைப்புடனும் நெருங்கிச் செயல்பட்டிருந்தன. குறித்த புலம்பெயர் அமைப்புக்கள் மேற்குலக இராஜதந்திர சமூகத்தின் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருக்கும் அமைப்புக்களுமாகும். இந்த பின்புலத்தில் நோக்கினால், ரணில் –மைத்திரி ஆட்சிக் காலத்தில் தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள், அரசாங்கம் – கூட்டமைப்பு பேச்சுக்களில் மறைமுகமாக செயல்பட்டிருந்தன.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் புலம் பெயர் சமூகம் ஏற்கனவே ஒருமுறை ரணில் அரசாங்கத்துடன் தொடர்பிலிருந்திருக்கின்றது. ஆனால், தற்போது பேச்சில் நேரடியாக பங்களிக்க வேண்டுமென்று அமெரிக்க செயல்பாட்டுக் குழு கோரியிருக்கின்றது. ஆனால், மேற்குறிப்பிட்ட அமைப்புக்கள் இதுவரையில் அவ்வாறான கோரிக்கைளை முன்வைக்கவில்லை. தற்போதைய ரணில் அரசாங்கம் என்பது, அடிப்படையில், மகிந்த – பஸில் ராஜபக்ஷவின் பொது ஜன பெரமுனவின் அரசாங்கமாகும். இவர்கள் மீதே தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் மனித உரிமைகள் (22ம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்குள் இரகசியமாக நுழைந்துள்ள 2 நாடுகள்! சிங்கப்பூர் ஊடகமொன்று வெளியிட்டுள்ள எச்சரிக்கை!

கடந்த ஏழு தசாப்தங்களில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்குண்ட நிலையில் அண்டை நாடான இந்தியா, சீனாவின் நிழல் இலங்கைக்குள் நுழைந்துள்ளதாக சிங்கப்பூர் ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இந்தியா, கடந்த ஜனவரி மற்றும் ஜீலை மாதங்களுக்கு இடையில் சுமார் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை விரைவான உதவியாக வழங்கியது. சர்வதேச நாணய நிதியத்திடம் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் ஒப்பந்தத்தை முடித்துக் கொண்ட இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரமாகி வருகின்றது.

இந்த நிலையில், பிராந்திய போட்டியாளரான சீனாவின் செல்வாக்கை எதிர்கொள்வதில் இந்தியா நீண்ட கால முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்ள முயல்வதாக அமைச்சர் ஒருவரை கோடிட்டு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இந்தியா, இலங்கையில் எவ்வளவு தொகையை வேண்டுமானாலும் முதலீடு செய்யும் பாதுகாப்பு எச்சரிக்கைகளை கருத்திற் கொண்டு, இந்தியா ஒருவேளை மூலோபாய ரீதியாக அதைப் பார்க்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையில் அதன் திட்டங்கள் மற்றும் மூலோபாய நோக்கங்கள் குறித்து ரொய்ட்டர்ஸின் கேள்விகளுக்கு இந்தியாவின் வெளியுறவு அமைச்சகம் பதிலளிக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது.

குறிப்பாக வடஇலங்கையில் இந்தியா முன்னெடுக்கவுள்ள புதுப்பிக்கப்பட்ட சக்தி உட்பட்ட திட்டங்கள், கடந்த 15 வருடங்களாகக் கட்டியெழுப்பட்டுள்ள,



இலங்கை தீவின் தெற்கில் சீனாவின் விரிவான உள்கட்டமைப்புத் திட்டங்களைச் சமப்படுத்த புதுடில்லிக்கு உதவும் என்றும் குறிப்பிட்டுள்ளது. இந்தநிலையில் இலங்கையின் தமிழ் ஆதிக்கம் நிறைந்த வடபகுதியும் தென்னிந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்துடன் இன உறவுகளைப் பகிர்ந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கையில் 2021ஆம் ஆண்டில் 5,401 பேர் இரட்டைக் குடியுரிமைக்காக விண்ணப்பித்ததாக குடிவரவு -குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. அவர்களில் பெரும் எண்ணிக்கையானனோர் அவுஸ்திரேலியர்கள். இவர்களின் எண்ணிக்கை 1,621.

இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்களில் 795 அமெரிக்கர்களும் உள்ளனர் எனவும் குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

டிசம்பர் 31, 2021 வரை இந்த நாட்டில் 4, 654 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

## புலிகள் இயக்கத்திற்கு புத்துயிர் அளிக்க பாகிஸ்தான் முயற்சியாம் இந்திய ரிப்பப்ளிக் வேர்ல்ட் ஊடகம் கண்டு பிடிப்பு!

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு புத்துயுர் அளிக்கும் நடவடிக்கைகளில் பாக்கிஸ்தானின் புலனாய்வு பிரிவான ஐஎஸ்ஐ ஈடுபட்டுள்ளது என இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் மீண்டும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு புத்துயுர் அளிக்கும் நடவடிக்கைகளில் பாக்கிஸ்தானின் புலனாய்வு பிரிவு ஈடுபட்டுள்ளது என ரிப்பப்ளிக் வேர்ல்ட் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளிற்கு புத்துயுர் அளிக்க முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் இந்தியாவின் தேசிய விசாரணை முகவர் அமைப்பு 9 பேரை கைது செய்துள்ள நிலையிலேயே இந்த செய்தி வெளியாகியுள்ளது. இலங்கையின் போதைப்பொருள் கடத்தல் கும்பலை சேர்ந்த குணசேகரன் புஸ்பராஜா என்ற இருவர் பாக்கிஸ்தானை சேர்ந்த ஆயுத போதைப்பொருள் விற்பனையாளர் ஹாஜி சலீம் என்பவருடன் இணைந்து செயற்பட்டனர் என இந்தியாவின் தேசிய விசாரணை முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது. இவர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் செயற்பட்டுள்ளனர் விடுதலைப்புலிகள் இயக்கத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்காக போதைப் பொருள் ஆயுதங்களை கடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என ரிப்பப்ளிக் வேர்ல்ட் தெரிவித்துள்ளது. இந்திய அமைப்பு இவர்களை கைது




செய்துள்ள அதேவேளை பிராந்தியத்தில் அமைதி பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காக பாக்கிஸ்தான் விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு புத்துயிர் அளிக்க முயல்கின்றது என இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்
Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை
Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் வெடித்த குழப்பம்!

## காரசாரமான வாக்குவாதங்களின் பின் முடிவின்றி முடிந்தது கூட்டம்!

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியாக, ஒற்றுமையாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் இரு வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றமையால் அது தொடர்பில் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இறுதி முடிவெடுப்பது என்று அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சூம் செயலி ஊடாக 26 டிசம்பர் 2022 மாலை இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 75 ஆண்டு விழா சர்ச்சை தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது. அது தொடர்பில் கட்சியின் மத்திய குழுவில் இறுதித் தீர்மானம் எடுப்பது எனத் தெரிவிக்கப்பட்டு அந்த விடயம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியாகப் பயணிப்பது குறிப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒன்றாக எதிர்கொள்வது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பாகவும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதன் போது தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியாகச் செயற்படுவதன் நன்மை அதன் அவசியம் தொடர்பிலும் விளக்கினார்.



வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இப்போதுள்ள நிலையிலேயே தேர்தலை எதிர்கொள்வோம் என்று குறிப்பிட்டார்.

மேலும், கூட்டமைப்பின் வாக்காளர்களின் நம்பிக்கையை சிதைக்கும் வகையில் புதிய கூட்டுத் தேவையில்லை என்றும் அது நடைமுறைச் சாத்தியமில்லை என்றும் அவர் கூறினார்.

கட்சியின் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம், 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அனந்தி போன்று பலரும் வெளியேறிச் சென்று தனிக் கட்சி உருவாக்கினார்கள். இனிமேல் வந்து அதிக ஆசனங்களைக் கேட்பார்கள். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளால் கூட எமக்கு பல இடங்களில் பாதிப்பே' என்று குறிப்பிட்டார். மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், எந்தக் கட்சியோடும் சேராமல் இலங்கைத் தமிழரசுக் கட்சியாகவே, தனித்துத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இந்த விடயங்கள் தொடர்பில் பரந்துபட்டு ஆராய்ந்து முடிவெடுக்கலாம் என்று கருத்து வெளியிட்டார்.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்தே இனிவரும் தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இது குறித்து, இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படாமல் கடும் வாக்குவாதத்தின் மத்தியில் இழுபறிபட்ட நிலை தொடர்ந்ததால், எதிர்வரும் 6ஆம் திகதி தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுப்பது என்று தெரிவித்து கூட்டம் முடிவுறுத்தப்பட்டது.

# தேய்பிறையாக மாறி அமாவாசையை நோக்கி கூட்டமைப்பு!

## தமிழரசுக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் தவராசா கடும் சீற்றம்!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது தேய்பிறையாக மாறி அமாவாசையை நோக்கிச் செல்வது போன்று இருக்கின்றது. இதனால் ஏற்படப்போகும் இருள் கட்சிக்கு மாத்திரமல்ல தமிழ் மக்களுக்கும்தான் இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்தார்.

சூம் செயலி ஊடாக திங்கட்கிழமை (26.12.2022) நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இதன் போது மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அனந்தி சசிதரன், அருந்தவபாலன் போன்று பலரை தமிழரசுக் கட்சி தான் வெளியேற்றியது. எல்லோரும் பிரிந்து செல்கின்றார்கள். ஆரம்பத்தில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்பு 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள். இப்போது 10 பேர் என்று கூட்டமைப்பின் ஆதரவு சுருங்கி வருகின்றது.

கூட்டமைப்பு இப்போது தேய்பிறையாக மாறி அமாவாசையை நோக்கிச் செல்வது போன்று இருக்கின்றது. இதனால் ஏற்படப்போகும் இருள் கட்சிக்கு மாத்திரமல்ல தமிழ் மக்களுக்கும் தான்.

எமது கட்சி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் மூன்றாம் இடத்தையே பெற்றது. முதலிடத்தில் சிங்கள தேசியக் கட்சி பெற்றது. நாம் இன்னமும் பிரிந்து பிளவுபட்டு நிற்போம் என்றால் உடுப்பிட்டித் தொகுதியில் கிடைத்த இடம் தான் எல்லாத் தொகுதிகளிலும் கிடைக்கும்.

வீட்டுக்குத்தான் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நிலைமை இப்போது மாறி விட்டது. நாம் பிளவுபட்டு நிற்பதால் கூட்டமைப்பு மீது மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டோம். இவ்வளவுக்கும் காரணம் கூட்டமைப்பின் தலைமை தான்.

ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் தான்தோன்றித்தனமான முடிவுகளுக்கு இடம்கொடுத்தமையால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது. எதிர் காலத்தில் கட்சியில் ஒரு நிபுணத்துவக் குழுவை அமைத்து கட்சியை ஜனநாயகப் பண்பாக மாற்றுவோம். முதலில் தமிழரசுக் கட்சியைச் சீர்திருத்த ஒரு நிபுணர் குழுவை அமைப்போம். தமிழரசுக் கட்சியை சீராக்கி விட்டு அதன் பின்னர் ஏனைய கட்சிகளை விமர்சிப்பதே பொருத்தம். தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்தே இனிவரும் தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை முன்னெடுப்பது குறித்து ஆராய அடுத்த மாதம் தமிழ்க் கட்சிகள் கொழும்பில் கூடவுள்ளன. ஜனவரி 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் கொழும்பில் இந்த சந்திப்பை நடத்த தீர்மானித்துள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

10, 11, 12, 13 ஆம் திகதிகளில் ஜனாதிபதி கலந்துரையாடலை நடத்தவுள்ள நிலையில், அதற்கு முன்னர் தமிழ்க் கட்சிகள் கூடி தீர்மானங்களை எடுக்கவுள்ளதாக மாவை சேனாதிராஜா கூறியுள்ளார்.

அண்மையில் இது தொடர்பில் நடந்த கலந்துரையாடல் அவசர அவசரமா இடம்பெற்ற நிலையில் அதில் சில கட்சிகள் கலந்து கொள்ளவில்லை என்றும், இதனால் அடுத்த கலந்துரையாடலுக்கு அனைவரையும் அழைக்கவுள்ளதாகவும் மாவை..சேனாதிராஜா குறிப்பிட்டுள்ளார்.

# இனப்பிரச்சனைப் பேச்சு அனுசரனை குறித்த எரிக் சொல்ஹெய்மின் கருத்துக்கு ரெலோ ஊடகப் பேச்சாளர் கொடுத்த சரியான பதிலடி!

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் யார் தலையிட வேண்டும் என்பதை தமிழ் மக்களே தீர்மானிப்பார்கள் என ரெலோ கட்சி தெரிவித்துள்ளது. அது குறித்த முடிவுகளை அறிவிக்க இலங்கையின் முன்னாள் சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்முக்கு எந்த அருகதையும் இல்லை என ரெலோ கட்சியின் ஊடகப்

தேசிய இனப்பிரச்சினை தொடர்பிலான பேச்சுவார்த்தைக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை இல்லை எனவும் பேச்சுவார்த்தைக்கு தாம் மத்தியஸ்தம் வகிக்கப் போவதில்லை எனவும் சிறிலங்கா அதிபரின் சர்வதேச காலநிலை ஆலோசகரும் இலங்கையின் முன்னாள் சமாதான அனுசரணையாளருமான எரிக் சொல்ஹெய்ம் அண்மையில் தெரிவித்திருந்தார். மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் தற் போது தேவை இல்லை எனவும் உள் ளக ரீதியாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வினை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கூறியிருந்தார். இந்த நிலையிலேயே இலங்கையின் முன்னாள் சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் ஒரு நாட்டினுடைய பிரதிநிதியோ அல்லது ஒரு இராஜதந்திரியோ அல்ல எனவும் அதை விடுத்து தமிழ் மக்களினுடைய அரசியல் தீர்வு தொடர்பான விடயங்களில் அழையா விருந்தாளியாக கருத்துச் சொல்வது அவசியம் அற்றது என அவர் கூறியுள்ளார்.

அத்துடன் யாருடைய தூண்டுதலில் தமிழ் மக்களின் அரசியல் விடயங்கள் பற்றி அவர் கருத்துக் கூற முற்படுகிறார்? அல்லது யாரைத் திருப்திப்படுத்த முனைகிறார் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்களின் நீதி, மனித உரிமை, நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்கதையாகி பல சிரமங்களை எதிர் கொண்ட பொழுது தற்போது கருத்



துச் சொல்பவர்கள் எங்கு சென்றார்கள் என ரெலோ கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் தெரிவித்தார்.

காலம் காலமாக புரையோடிப் போன தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன் நகர்த்த வேண்டும் என்பதில் தமிழ் தலைவர்கள் ஒருமித்த நிலைப்பாட்டை எட்டியுள்ளனர். ஆகவே எரிக் சொல்ஹம் தன்னுடைய உத்தியோபூர்வமான பணியை மாத்திரம் மேற்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்

# மாகாண மாகாணங்களின் அதிகாரங்கள் அனைத்தும் மீண்டும் கையளிக்கப்பட வேண்டுமென ஜனாதிபதியிடம் டக்ளஸ் வலியிறுத்தல்!

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தினால் இல்லாது செய்யப்பட்ட மாகாணங்களுக்கான அதிகாரங்கள் அனைத்தும் மீளவும் மாகாண சபைகளிடம் கையளிக்கப்பட வேண்டும் என்ற விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், நடைமுறைச் சாத்தியமான வழிமுறையை ஏற்றுக் கொண்டு வெளிப் படைத் தன்மையுடன் செயற்படக் கூடிய தமிழ் தரப்புக்களுடன் இணைந்து, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை தொடர்பான விடயத்தில் செயற்படுவதற்கு தயாராக இருப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடனான கலந்துரையாடல் தொடர்பாக 28 டிசம்பர் 2022 நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், குறித்த கலந்துரையாடலில் அமைச்சரவை உப குழுவின் பிரதிநிதி என்ற அடிப்படையிலும் அரசியல் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையிலும் இரட்டை வகிபாகத்தினை கொண்டிருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 13 ஆம் திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்ட போது மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளவும் கையளிக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 13ஆவது திருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர வேண்டும் என்று கடந்த 35 வருடங்களாக ஈ.பி.டி.பி. வலியுறுத்தி வருகின்ற வழி முறையையே தற்போது ஏனைய தரப்புக்களும் வலியுறுத்தி வருகின்றமை தன்னுடைய அரசியல் பயணத்திற்கு கிடைத்த வெற்றி என தெரிவித்துள்ளார்.



இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பங்கு பற்றுதலோடு தேசிய ரீதியிலான 75வது சுதந்திர தின கொண்டாட்டம் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் இடம் பெறவுள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன் யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த புதன்கிழமை (டிச. 28) இடம்பெற்ற ஆரம்பகட்ட கலந்துரையாடலின் பின்பு கருத்து தெரிவிக்கும் போது இதனை தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,. ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் மூன்று முக்கியமான நிகழ்வுகள் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக, பெப்ரவரி 4ஆம் திகதி கொழும்பில் இடம்பெறுவதையடுத்து, பெப்ரவரி 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

# வியட்நாமில் இருந்து இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களம், குடிவரவு அதிகாரிகளால் விசாரணை

இலங்கை பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்ட நிலையில், நாட்டை விட்டு வெளியேறி, சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக கனடா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தருணத்தில், வியட்நாமில் மீட்கப்பட்ட இலங்கையர்களில் 151 பேர் மீண்டும் தாயகம் சென்றுள்ளனர்..

வியட்நாமிலிருந்து விசேட விமானத்தின் மூலம் நாட்டிற்கு அழைத்து செல்லப்பட்ட இவர்கள், 28 டிசம்பர் 2022 புதன்கிழமை அதிகாலையில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தனர். இவ்வாறு தாயகம் சென்றவர்கள், மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பட்டதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் ஹங்சிகா குமாரசிங்க தெரிவித்துள்ளார். நாடு திரும்பியவர்கள் மத்தியில், 9 பெண்களும் அடங்குவதாக அவர் கூறியுள்ளார்.

நாடு திரும்பிய விருப்பம் தெரிவித்த நிலையிலேயே, இவர்களை நாட்டிற்கு அழைத்து செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். சட்ட விரோதமாக நாட்டை விட்டு வெளியேறி, கடல் மார்க்கமாக கனடா நோக்கி பயணிக்க முயற்சித்து, வியட்நாமில் மீட்கப்பட்ட மேலும் இலங்கையர்கள் அங்குள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

அகதிகளுக்காக சர்வதேச அமைப்பு, வெளிவிவகார அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், இலங்கை போலீஸாரின் தலையீட்டில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கை நாளுக்கு நாள் எதிர்நோக்கி வருகின்ற பொருளதார நெருக்கடி காரணமாக, நாட்டிலிருந்து வெளியேறுவோரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

அதேபோன்று, சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாகவும், வெளிநாடுகளை நோக்கி இலங்கையர்கள் செல்கின்றனர்.

இவ்வாறு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிய 303 இலங்கையர்கள், மியன்மார் வழியாக கனடா நோக்கி செல்ல முயற்சித்திருந்தனர்.



இவ்வாறு கடல் மார்க்கமாக சென்றுக் கொண்டிருந்த தருணத்தில், அவர்கள் பயணித்த கப்பல் விபத்துக்குள்ளாகியிருந்தது. இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் இலங்கை கடற்படையின் மீட்பு மையத்திற்கு அறிவிக்கப் பட்டது.

சிங்கப்பூர், வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் கடற்படை மீட்பு மையங்களுக்கு, இலங்கை கடற்படை தகவல்களை பரிமாறியுள்ளது. இலங்கை கடற்படையின் தகவலை அடுத்து விரைந்து செயற்பட்ட சிங்கப்பூர் அதிகாரிகள், அகதிகளுடன் மூழ்கும் அபாயத்திலிருந்த கப்பலை கண்டு பிடித்துள்ளனர்.

இது குறித்து, இந்த கப்பலுக்கு அருகாமையில் பயணித்த ஜப்பானுக்கு சொந்தமான கப்பலொன்றிற்கு கடந்த நவம்பர் மாதம் 7ஆம் தேதி தகவல் பரிமாற்றப்பட்டதை அடுத்து, குறித்த அகதிகள் ஜப்பானுக்கு சொந்தமான கப்பலினால் மீட்கப்பட்டு, வியட்நாம் அதிகாரிகளிடம் நவம்பர் மாதம் 08ம் தேதி ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அகதிகளை தாம் பாதுகாப்பாக மீட்டதாக சிங்கப்பூர் அதிகாரிகள், இலங்கை கடற்படைக்கு அதிகாரபூ ர்வமாக அறிவித்திருந்ததாக இலங்கை கடற்படை உறுதிப்படுத்தியது. இவ்வாறு மீட்கப் பட்டவர்களில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களே அதிகளவில் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்தவர்கள், தமது பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்து அதனூடாக கிடைத்த பயணத்தை கொண்டு சட்டவிரோதமாக கனடா நோக்கி செல்ல தயாராகியுள்ளனர். இந்த நிலையில், அமெரிக்க தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தும் தமிழ் மொழி பேசக்கூடிய பிரதான முகவர் ஒருவரின் உதவியுடன், ஏனைய முகவர்களின் ஒத்துழைப்புடனும் இவர்கள் இவ்வாறு அகதிகளாக கனடாவை நோக்கி செல்ல முயற்சித்துள்ளனர்.

கனடா செல்லும் அகதி ஒருவரிடமிருந்து தலா 5000 அமெரிக்க டாலர் அறவிடப்பட்டதாக கப்பலில் பயணித்த அகதியின் சகோதரன் பிபிசி தமிழுக்கு உறுதிப்படுத்தினார். குறித்த இலங்கையர்கள் உரிய வகையில் விஸாக்களை பெற்று, விமானத்தின் மூலம் ஒன்றரை மாதத்திற்கு முன்பாக மியன்மார் நோக்கி பயணித்துள்ளனர்.

முகவரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட 5000 அமெரிக்க டாலரின் ஊடாக, விமான பயணச் சீட்டுக்கள், விஸா உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டதாக அவர் கூறுகின்றார். இந்த நிலையில், மியன்மார் நோக்கி சென்ற இலங்கையர்கள், அங்கிருந்து கடந்த ஒக்டோபர் மாதம் 10ம் தேதி கனடா நோக்கிய தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

சுமார் 28 நாட்கள் கடல் சீற்றம் உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பயணித்த குறித்த கப்பலில், அண்மையில் தூவாரமொன்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்து, கப்பலுக்குள் நீர் பிரவேசித்துள்ள நிலையில், கப்பல் மூழ்கும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளதாக அறிய முடிந்தது.. இந்த நிலையிலேயே, குறித்த கப்பலில் பயணித்த அகதிகள், இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர். இதையடுத்தே, குறித்த படகில் பயணித்த அகதிகள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

வியட்நாமிலுள்ள முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை அகதி ஒருவர் கடந்த நவம்பர் மாதம் 23ம் தேதி உயிரிழந்திருந்தார். நாடு திரும்ப விருப்பமில்லாத நிலையில், இரண்டு இலங்கையர்கள் முகாமிற்குள் கடந்த நவம்பர் மாதம் 18ம் தேதி தற்கொலை முயற்சியை மேற் கொண்ட பின்னணியில், அவர்கள் மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தவர்களில் ஒருவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இலங்கைக்கு மீள அனுப்பும் முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொண்டு வந்த நிலையில், தன்னால் மீண்டும் தாயகத்துக்குத் திரும்ப முடியாது என்று கூறி அந்த அகதி உயிரை மாய்த்துக் கொண்டதாக வியட்நாம் முகாமிலுள்ள மற்றொரு அகதி பிபிசி தமிழிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் – சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 37 வயதான சுந்தரலிங்கம் கிரிதரன் என்ற 4 பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்திருந்தார். உயிரிழந்த சுந்தரலிங்கம் கிரிதரனின் சடலம் அண்மையில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு, இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டிருந்தன.

வியட்நாமிலுள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள எஞ்சிய இலங்கையர்களில் பலர், மீள இலங்கைக்கு திரும்ப முடியாது என கூறி வருவதாக தெரிய வருகின்றது. எனினும், ஏனையோரையும் நாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இலங்கைக்கு வருகைத் தந்தவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். –பிபிசி

# பொறுப்புக்கூறலும் நல்லிணக்கமும்:

## ஜனாதிபதி எதிர்நோக்கும் இரு சவால்கள்!



கலாநிதி ஜெகான் பெரேரா

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் இரவு பஸ்ஸின் முழு ஆசனங்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன. விடுமுறையில் வந்த புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்த பலர் தங்களது கருத்துக்களை மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொண்டார்கள். கொழும்பில் இரு வாரங்களை செலவிட்டதாகவும் யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருப்பதாகவும் அங்கு இரு வாரங்களைச் செலவிடவிருப்பதாகவும் அவர்களில் ஒருவர் கூறினார். இலங்கையின் இயற்கை அழகு மற்றும் அதன் மக்களின் நட்பிணக்கத்தையும் பற்றி அவர் கனிவாகப் பேசினார். விடுமுறையில் வந்து இரு மாதங்களை செலவிட்டுக்கொண்டருப்பதாகவும் போதுமான விடுமுறை தனக்கு இருப்பதாகவும் அவர் கூறினார்.

கிறிஸ்மஸூக்கு முன்னரான நாட்களில் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி,காலி மற்றும் மட்டக்களப்பு போன்ற நகர மையங்கள் வழமைக்கு திரும்பியிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. கொழும்பில் வாகனப்போக்குவரத்து நெரிசல் மாத்திரமல்ல கடைகளிலும் பெருமளவில் மக்கள் சந்தடி காணப்பட்டது. இதே மாதிரியே யாழ்ப்பாணமும். அங்கு கடைகளில் பெருமளவில் மக்கள் கூடினார்கள் என்றாலும் கொழும்பைப் போன்று வீதிகளில் வாகன நெரிசல் இருக்கவில்லை. விடுமுறை காலம் என்பதால் யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல்களில் அறைகள் முழுமையாக பதிவு செய்யப்பட்டுவிட்டன. மிதமான விலைகளில் அறைகளைக் கொண்ட ஹோட்டல்களிலும் கூட இடமிருக்கவில்லை.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மாணவர்களால் நிரம்பியிருந்தது. இணைய வழியாக வகுப்புக்களை நடத்துகின்ற வேறு சில பல்கலைக் கழகங்களைப் போலன்றி யாழ்ப்பாண பல்கலைக்கழகம் நேரடி வகுப்புக்களை நடத்துவதற்கு தீர்மானித்திருந்தது. பகிடிவதைக்கு இடங்கொடுக்காதிருப்பதில் அந்த பல்கலைக்கழகம் உறுதியான தலைமைத்துவப் பண்பை வெளிக்காட்டியது. இரு விரிவுரையாளர்களினால் ஆரம்பிக்கப்பட்ட சமூக உணவு நிலையமும் இயங்குகிறது.

உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்கான செலவுகள் கடுமையாக அதிகரித்த காரணத்தால் வேறு சில பல்கலைக் கழகங்களில் மாணவர்களின் வருகையில் வீழ்ச்சி காணப்படுகிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடந்த காலத்தில் இன அடிப்படையில் மாணவர் குழுக்களிடையே மோதல்கள் இடம்பெற்றன. அரசியல் காரணங்களுக்காக நிருவாகத்துடனும் மாணவர்கள் மோதிக் கொண்டார்கள். அந்த நிலைமை இப்போது மாறிவிட்டது. மாணவர்களின் நலன்களில் அக்கறைகொண்ட நல்ல தலைமைத்துவமே இந்த மாற்றத்துக்கு காரணமாகும்.

ஆனால், இது மாத்திரமல்ல நாட்டில் காணப்படுகின்ற யதார்த்தநிலை. பெரிதாக வெளியில் தெரியாவிட்டாலும் பெரும்பான்மையான மக்களின் வாழ்வை பாதிக்கின்ற இன்னொரு யதார்த்தமும் இருக்கின்றது. பொருளாதார வீழ்ச்சி காரணமாக இந்த வருடம் பூராவும் சனத்தொகையில் பரந்தளவு பிரிவினரின் வாழ்க்கை அவலங்கள் நிறைந்ததாக இருந்தது. மக்களின் வருமானத்தில் எந்த அதிகரிப்பும் இல்லாத அதேவேளை விலைவாசி இரண்டு, மூன்று மடங்கு அதிகரித்த காரணத்தால் பெருமளவு மக்களால் வாழ்க்கையை சமாளிக்கமுடியாமல் போய்விட்டது.

அவர்கள் தங்களது சேமிப்புக்களை அன்றாட செலவுகளுக்காக பயன்படுத்த வேண்டியேற்பட்டது மாத்திரமல்ல கடன் படவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். புதிய வருடத்தில் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு தயார் செய்வதில் அதாவது உயர்ந்த விலைகளில் பாடசாலை உபகரணங்களையும் அப்பியாசக் கொப்பிகளையும் வாங்குவதில் மக்கள் எதிர்நோக்கக்கூடிய நெருக்குதல்கள் மீண்டும் ஆர்ப்பாட்டங்களுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மக்களின் பிரச்சினைகளில் அக்கறை காட்ட அரசாங்கம் இதுவரையில் தவறிவிட்டது.

### முதலாவது சவால்

நாட்டு மக்களில் பெரும்பான்மையானவர்கள் கடுமையான பொருளாதார இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும்போது பழைய ஊழல் நடவடிக்கைகளும் பொறுப்புக்கூறல் இன்மையும் தொடர்ந்துகொண்டிருப்பதே இன்றைய நிலைவரத்தின் அனர்த்தமாகும். அரசியல் தலையீட்டுடன் வெளிப்படைத்தன்மை இல்லாமல் மருந்துவகைகள் கொள்வனவு செய்யப்படுவதாக கூறப்படும் விவகாரத்தை சுற்றி சர்ச்சையொன்று மூண்டிருக்கிறது. அளவுக்கு அதிகமாக மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்ட முன்னைய நடவடிக்கைக்கு மத்தியில் இப்போது இந்த சர்ச்சை வந்திருக்கிறது.

நாடு பாரதூரமான வெளிநாட்டு நாணய பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டிருக்கின்றதற்கு மத்தியில், ஏற்கெனவே அளவுக்கு அதிகமாக கொள்வனவு செய்யப்பட்ட கொவிட் தடுப்பூசி கையிருப்பை அழிப்பதற்கான தொழில்நுட்ப வழிமுறைகளை நாடுவதில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. இன்னொரு கேள்விப் பத்திர சர்ச்சை ஊழல் நடவடிக்கைகள் தொடருவதை அம்பலப்படுத்துகிறது. கேள்விப்பத்திரங்களைக் கோருவதில் உள்ள பிரச்சினை காரணமாகவே நிலக்கரி கொள்வனவு செய்யப்படவில்லை என்று கூறும் இலங்கை மின்சார பொறியியலாளர்கள் விரைவாக இந்த பிரச்சினை தீர்க்கப்படாதுபோனால் பத்து மணி நேர மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டிவரும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அவ்வாறு நேருமானால் மக்கள் மீணடும் வீதிக்கு இறங்கும் நிலை உருவாகலாம்.

இலங்கை உட்பட சமுதாயங்கள் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு கையாளக்கூடிய சில வழிகாட்டல்களை பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தனது கிறிஸ்மஸ் செய்தியில் கூறியிருக்கிறார். சிக்கல் இல்லாத முறையில் எழுதப்பட்டிருக்கும் பாப்பரசரின் செய்தியை விளங்கிக்கொள்வதில் எந்த பிரச்சினையும் இல்லை. கீழ் வருவன இலங்கைக்கு பிரயோகிக்கக்கூடிய பிரதான தொனிப்பொருள்களின் ஒரு சுருக்கமாகும்.

முதலாவது பொறுப்புக் கூறல் பற்றிய பிரச்சினையாகும். பொறுப்புக்கூறல் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தாதவர்களும் அதில் நம்பிக்கை இல்லாதவர்களும் சமூகத்தில் ஒரு பெரும்பான்மையினராக இருக்கும்போது பிரச்சினை ஏற்படுகிறது.

உலகளாவியதாக இந்த பிரச்சினை இருப்பதை ஏற்றுக்கொண்டவராக பாப்பரசர், 'சந்தடியில்லாமல் எம்மத்தியில் பதுங்கியிருக்கும் தீமை உட்பட தீமைகளை கண்டனம் செய்வது போதுமானதல்ல.... கூடுதலாக கண்டனம் செய்வது பிரச்சினையை நாம் தீர்த்துவிட்டோம் என்ற ஒரு மாயத்தோற்றத்தை கொடுக்கக் கூடும்" என்று கூறியிருக்கிறார்.

அதே போன்றே இலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக் கூறல் பிரச்சினைகளில் முன்னோக்கிச் செல்வதற்கு தீர்மானிக்கவேண்டிய தேவை இருக்கும். இது முதலாவது சவாலாகும்.

ஊழலாக இருந்தாலென்ன, பொறுப்புக்கூறல் அல்லது அரசியலமைப்பை பின்பற்றுவதாக இருந்தாலென்ன இந்த விடயத்தில் ஜனாதிபதி இன்னமும் உறுதிப்பாட்டை வெளிக்காட்டவில்லை. அரசாங்க உறுப்பினர்களை எதிர்நோக்கி நிற்கும் குடியுரிமைப் பிரச்சினை இன்னமும் தீர்வு காணப்படாததாகவே இருக்கிறது. அரசியலமைப்புக்கான 21வது திருத்தம் நிறைவேற்றப்பட்டமை நல்லாட்சிக்கும் நல்லெண்ணத்திற்கும் கிடைத்த வெற்றி என்று பெருமையுடன் கூறப்படுகிறது.

ஒரு நடுநிலையான முறையில் அரசியலமைப்பை பின்பற்றுகின்ற விடயத்தில் இதுவரையில் அரசாங்கத்திடமிருந்து வந்திருக்கக்கூடிய சமிக்ஞைகள் மிகவும் எதிர்மறையானவையாகவே இருக்கின்றன.

> தனது கிறிஸ்மஸ் செய்தியில் பாப்பரசர் வலியுறுத்தியதைப் போன்று தீமையை வெறுமனே தவிர்ப்பதல்ல, எம்மால் முடிந்த நல்லவை சகலவற்றையும் செய்யவேண்டியதே இன்றை கட்டத்தில் சிவில் சமூகத்துக்கும் குடிமக்களுக்கும் இருக்கும் பணியாகும்.



### இரண்டாவது சவால்

பாராளுமன்றத்தின் சில நடவடிக்கைகள் சட்டத்தின் ஆட்சி அவமதிக்கப்படுவதை மூடிமறைக்கின்றன. ஆளும் வர்க்கம் தன்னை சட்டத்துக்கு மேலானதாக நம்புகிறது. 'ஆயுதங்களின் வன்முறைக்கு அப்பால், வாய்மொழி வழியான துஷ்பிரயோகமும் அதிகார துஷ்பிரயோகத்தின் வன்முறையும் வம்புப் பேச்சில் மறைந்திருக்கும் வன்முறையும் உள்ளன" என்று பாப்பரசர் எச்சரிக்கிறார். இதை மறுவார்த்தைகளில் கூறுவதானால், இராணுவப் போர்க்களத்தில் போருக்கு 2009 ஆம் ஆண்டு வந்த முடிவு சமாதானத்தை உறுதிப்படுத்திவிட்டதாக அர்த்தப்படவில்லை. ஏனென்றால் வன்முறை பல்வேறு வடிவங்களை எடுக்கமுடியும்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க வெற்றி கொள்வதற்கு இரண்டாவது முக்கியமான ஒரு சவாலும் இருக்கிறது. இலங்கையின் இனநெருக்கடியை அரசியல் தீர்வொன்றின் ஊடாக முடிவுக்கு கொண்டவருவதே அந்த சவாலாகும். சுமார் 75 வருட காலமாக முன்னைய தலைவர்கள் தோல்வி கண்டபோதிலும் அடுத்தவருடம் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த பணியை தான் சாதிக்கப் போவதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

இணக்கப்பாட்டைக் காணும் இந்த செயன்முறையில் வெற்றியை சாதித்துக்காட்டுவதற்கான ஜனாதிபதியின் முயற்சிகள் தொடர்பில் கணிசமான நம்பிக்கையீனமும் எதிர்ப்பும் வெளிக்காட்டப்படுகிறது. பொறுப்புக்கூறல் பிரச்சினைகளை கையாளுவதில் இதுவரையில் அவர் கண்ட தோல்வி அரசியல் தீர்வுக்கு இணக்கப்பாட்டை காணும் முயற்சியிலும் தோல்வியே கிட்டும் என்பதற்கான காரணமாக கூறப்படுகிறது.

ஊழலும் தீயொழுக்கமும் இலங்கைக்கு மாத்திரம் பிரத்தியேகமானவையல்ல. அவற்றை உலகெங்கும் காணமுடியும். இந்த பிரச்சினைகள் மேலோட்டமான முறையில் கையளப்படவோ அல்லது எப்போதாவது ஒரு தடவை நிகழ்கிற பிறழ்ச்சிகளாக நோக்கப்படவோ கூடாது.

சட்டத்தின் ஆட்சிக்கு உறுதிபூண்ட ஜனநாயக சமுதாயம் ஒன்று இந்த நிலைவரங்களை எவ்வாறு கையாளுகிறது என்பதே கேள்வியாகும். பொருளாதாரப் பிரச்சினையும் அரசியலும் இல்லை என்றால் சுவிட்சர்லாந்தை விடவும் சிறப்பாக வாழ்வதற்கு உகந்த நாடு இலங்கை என்று 15 வருடங்களுக்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேறிய புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்தவர் கூறினார்.

சிங்கள கிராமத்தைப் பற்றி தரமான நாவல் ஒன்றை எழுதிய பிரிட்டிஷ் காலனித்துவ அதிகாரியான லெனார்ட் வூல்வ் இலங்கை கிழக்கின் சுவிட்சர் லாந்தாக வரமுடியும் என்று எதிர்வு கூறினார். 1938 ஆம் ஆண்டு காலனித்துவ அரசாங்கத்துக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் அவர் இலங்கைக்கு சமஷ்டி முறை உகந்தது என்ற தனது சிபாரிசை நியாயப்படுத்துவதற்காக அன்றைய இலங்கையில் வாழ்ந்த சகல சமூகங்களினதும் சனத்தொகை விபரங்களை சுவிட்சர்லாந்தின் ஒவ்வொரு கன்டோனின் அளவுடன் ஒப்பிட்டு விளங்கப் படுத்தியிருந்தார்.

உள்ளூர் மட்டத்தில் மாற்றத்தின் முகவர்களாக மக்கள் மாறுவதே அதிகாரம் பரவலாக்கப்பட்ட முறையொன்றின் அல்லது சமஷ்டி முறையொன்றின் சாராம்சமாகும்.

சமூக உணவு நிலையம் ஒன்றை (Community Kitchen) நடத்துவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் மூலமாக முன்னோக்கிச் செல்வதற்கான பாதையை அரசியல் சாராத நிருவாக மட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழகம் காட்டியிருக்கிறது. அந்த உணவுநிலையத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்களினால் சத்தான உணவைப் பெறக்கூடியதாக இருக்கிறது.

தனது கிறிஸ்மஸ் செய்தியில் பாப்பரசர் வலியுறுத்தியதைப் போன்று தீமையை வெறுமனே தவிர்ப்பதல்ல, எம்மால் முடிந்த நல்லவை சகலவற்றையும் செய்யவேண்டியதே இன்றை கட்டத்தில் சிவில் சமூகத்துக்கும் குடிமக்களுக்கும் இருக்கும் பணியாகும். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இத்தகைய பணியையே செய்கிறது. தேசிய மீட்சிக்கான சிறந்த திட்டம் ஒன்றை இனிமேல்தான் நாம் காணவேண்டியிருப்பதால் இதுவே முன்னோக்கிச் செல்வதற்கான ஒரே பாதையாகும்.





விழா இனிதே நடை பெற வாழ்த்துக்கள்

- ஈழநாடு -

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

24 டிசம்பர் 2022 முதல் 31 டிசம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளு கின்றோம்.

## மேலதிக விபரங்களுக்கு:-

## ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பர் பொன்னுத்துரை
### திருமதி நாகமுத்து பொன்னுத்துரை

நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 30வது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கதிரேசு முத்துத்தம்பி

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் மேற்கைச் சேர்ந்த அமரர் உயர்திரு கதிரேசு முத்துத்தம்பி அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 25 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு.கதிரேசு முத்துத்தம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு: நினைவு நாள் 27 டிசம்பர் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.. திருமதி இரத்தினசோதி அரியராஜ சிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 28வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சடாச்சரசுந்தம் கந்தசாமி

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சடாட்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது 28வது ஆண்டு நினைவு தினம் 29 டிசம்பர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சடாட்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நீங்கா நினைவுகளுடன்



### திரு பிரபா நல்லதம்பி (பாபு)

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த பாபு என்று அன்பாக அழைக்கப்படும் **RE/MAX** வீடு விற்பனை முகவர் திரு பிரபா நல்லதம்பி அவர்களது முதலாம் மாத நினைவு நாளுக்காக 28 டிசம்பர் 2022 திங்கட்கிழமை இறுப்பிட்டி ஐங்கரன் சனசமூக நிலைய நண்பர்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பிரபா நல்லதம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் நண்பர்களுடன் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கம்மா சதாசிவம்

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது நான்காவது ஆண்டு நாள் நினைவு நாள் 02 ஜனவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல்
### திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளையொட்டியும் கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 25 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். இணையர்கள் இருவரதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



25 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ஆனந்தசேகரன் அமிர்தலிங்கம் அவர்கள் நத்தார் தினத்தன்று பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



25 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் இனிய நத்தார் தினத்தன்று பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



25 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் இனிய நத்தார் தினத்தன்று அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



25 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் இனிய நத்தார் தினத்தன்று செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



25 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாய் மேற்கைச் சேர்ந்த திரு கதிரேசு முத்துத்தம்பி அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



24 டிசம்பர் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தீசன் விஜி தம்பதிகளின் செல்வப்புதல்வி நிவாஷினியின் பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வி நிவாஷினி தனது பெற்றோர்களுடன் இணைந்து 26 டிசம்பர் 2022 திங்கட்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



27 டிசம்பர் 2022 செவ்வாய்க்கிழமை யாழ்.உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினஜோதி அரிராஜசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



28 டிசம்பர் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சற்குணநாதன் சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் கிசோரின் 11வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கிசோர் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




28 டிசம்பர் 2022 புதன்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனகடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த Re/Max வீடு விற்பனை முகவர்பிரபா நல்லதம்பி (பாபு) அவர்களது நினைவாக இறுப்பிட்டி ஐங்கரன் சனசமூக நிலைய நண்பர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



28 டிசம்பர் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் ஞானகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகுந்தனின் 34வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் முகுந்தன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



29 டிசம்பர் 2022 வியாழக்கிழமை சீரடி சாயிபாபா விரத உபயமாக கனடாவில் வசிக்கும் செல்வி ஜெகரின்யா திருமதி செல்வமலர் ஆகியோர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



29 டிசம்பர் 2022 வியாழக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருசடாச்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது 28வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



23 டிசம்பர் 2022 வெள்ளிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

## 34வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் முகுந்தன் நந்தகுமார்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி நந்தகுமார் ஞானகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகுந்தன் நந்தகுமார் 28 டிசம்பர் 2022 புதன்கிழமை தனது 34வது பிறந்த நன்நாள் ஆகும். அன்றையதினம் செல்வன் முகுந்தன் தனது பெற்றோருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை 43 காணும் செல்வன் முகுந்தன் பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!


TITLE SPONSOR
MAHESAN SUBRAMANIAM
REAL ESTATE BROKER
eXp REALTY BROKERAGE
POWERED BY
ASIYANS
Quality Forever
அனலை எக்ஸ்பிரஸ் Analai Express HD TV
பாரம்பரியம்
முத்தமிழோடு கலைஞர்களின் சங்கமம்
Chinese Cultural Centre 5183 Sheppard Ave E,
Scarborough, ON M1B 5Z5
SATURDAY
JAN 07 2023 @ 4.PM
GOLD SPONSOR
MORTGAGE ALLIANCE
ARI PARAMALINGAM
Mortgage Agent
SILVER SPONSOR
BRONZE SPONSOR
CAN LANKA IMMIGRATION SERVICE INC.
HIMALAYA
VASANTHA JEWELLERY
VIBRANT HOSPITALITY GROUP
Y&A
TORBRAM
HOMELIFE
PRINT MEDIA PARTNER
ஈழநாடு
STREAMING PARTNER
IBC தமிழ்
RADIO SPONSOR
OTHER SUPPORTINGSPONSOR
Tamil Mirror



# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2022 புதன்கிழமை முதல் 21-01-2023 சனிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2022 புதன்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
25-11-2022 வெள்ளிக்கிழமை, 26.11.2022 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 27-11-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
02.12.2022 வெள்ளிக்கிழமை, 03.12.2022 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 11-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.


**ஆஞ்சநேயர் ஜெயந்தி**
23.12.2022 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல்,**
**படி ஏறி அபிஷேகம் செய்தல்ச பேட்டை துள்ளுதல்**
25-12-2022 ஞாயிற்றுக்கிழமை, 26.12.2022 திங்கட்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணி முதல் மாலை 3:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2022 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 31.12.2022 சனிக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் இடம் பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**
01-01-2023 ஞாயிற்றுக்கிழமை முதல் 14-01-2023 சனிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருவாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
14-01-2023 சனிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2023 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

# சாதனையாளர்களைக் கௌரவித்து சிறப்பாக நடைபெற்ற கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர் சங்கத்தின் 10வது ஆண்டு விழா

















இலங்கை முன்னாள் வர்த்தகர் சங்கம் கனடாவின் 10வது ஆண்டு விழா கடந்த 26 டிசம்பர் 2022 திங்கட்கிழமை சங்கத்தின் தலைவரும் சமூக சமய பொதுநல ஆர்வலரும் ஆதரவாளருமாக திரு கேதா நடராஜா அவர்கள் தலைமையில் ஸ்காபரோவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முக்கிய அம்சமாக வர்த்தகத்துறை, சமூகம், பொதுப்பணி என கனடா மண்ணில் வாழும் சாதனையாளர்கள் ஏழு பேர் கௌரவிக்கப் பட்டனர். அத்துடன் தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்ட மொன்றையும் ஆரம்பித்துள்ளனர். அத்தகைய திட்ட த்திற்கு உதவ விரும்புவோர் மேற்படி சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். இங்கே காணப்படும் போட டோவில் சாதனையாளர்கள் ஏழு பேர் காணப்படு கின்றனர். கனடாவின் முன்னணி இசைக்குழுவான அரவிந்தனின் மெகாரியுனஸ் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

வர்த்தக தீபத்தில் ஓம் மீரா நகைமாளிகையின் 2பவுன் பெறுமதிமிக்க தங்கச்சங்கிலியையும் ,நல்லூர் குமரன் புடவை மாளிகையின் காஞ்சிபுரம் பட்டுச்சேலையை யும் அன்பளிப்பாக ஏலத்துக்கு வழங்கியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. விழா சிறப்புற அனைத்து வகையிலும் உதவியவர்களுக்கு தலைவர் திரு கேதா நடராஜா அவர்கள் நன்றி தெரிவித்தார்.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# கடந்து செல்லும் கொந்தளிப்பான ஆண்டு!

இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் பல மாற்றங்கள் ஒன்றாக நிகழ்ந்து மிகக் கொந்தளிப்பான ஒரு ஆண்டு நம்மைக் கடந்து போகிறது. இந்த ஆண்டில் தான் இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் முப்பொழுதும் ஏற்பட்டிராத ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அதற்கு எதிராக சிங்கள மக்கள் தெருக்களில் இறங்கிப் போராடினார்கள்.




அரகலய என்று அழைக்கப்பட்ட அப் போராட்டமானது உலகத்தின் கவனத்தை ஈர்க்குமளவுக்கு படைப்புத்திறன் மிக்கதாக காணப்பட்டது. போரை வெற்றி கொண்ட ஒரு குடும்பம் நாட்டின் கருவூலத்தை திருடி விட்டது என்று சிங்கள மக்கள் குற்றம் சாட்டினார் .போராட்டத்தை ஒடுக்குவதற்கு அக்குடும்பம் குண்டர்களை ஏவி விட்டது. ஆனால் அது விபரீதமான விளைவைக் தந்தது.

ரிரவுக்குள் 30க்கும் குறையாத அரசியல்வாதிகளின் வீடுகளும் சொத்துக்களும் எரித்து அழிக்கப்பட்டன. ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஒரு பிரதேச சபைத் தலைவரும் கொல்லப்பட்டார்கள். இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் சிங்கள அரசியல்வாதிகளுக்கு அப்படியோர் அச்சம் நிறைந்த இரவு முன்னெப் பொழுதும் வந்ததில்லை. அதன் விளைவாக ராஜபக்சக்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார்கள்.

ஏந்த ஒரு குடும்பத்துக்கு சிங்கள மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கினார்களோ, அதே குடும்பத்தை அவர்கள் பதவிகளிலிருந்து துரத்தினார்கள். எனினும் அந்த குடும்பம் ஒற்றை யானைக்குப் பின் பாதுகாப்பைத் தேடிக் கொண்டது. மக்களால் நிராகரிக்கப்பட்டவரும் தனது அரசியல் வாழ்வின் இறுதிக் கட்டத்தை அடைந்து வரும் ஆழங்காண முடியாத தந்திரசாலியுமாகிய ரணில் விக்ரமசிங்க அந்தப் போராட்டத்தின் கனிகள் அனைத்தையும் தன் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டார். அந்தப் போராட்டம் அவருக்கு ஓய்வுதியம் பெறும் காலத்தில் வாழ்வு கொடுத்தது.

அப்போராட்டத்தை அவர் நசுக்கினார். மன்னராட்சிக்கு எதிரான பிரஞ்சுப் புரட்சியின் கனிகளை நெப்போலியன் திருடியது போல, சிஸ்டத்துக்கு எதிரான அரகலயவின் கனிகளை அந்த சிஸ்டத்தை பாதுகாக்கும் ஒருவர் தனது சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டார். இப்படியாக கடந்து போகும் ஓர் ஆண்டு என்பது இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் நம்ப முடியாத மாற்றங்கள் நிகழ்ந்த ஓராண்டாக காணப்படுகிறது. இந்த மாற்றங்களின் தொகுக்கப்பட்ட விளைவுகளே இனிவரும் காலங்களில் இலங்கைத்தீவின் அரசியல் போக்கை தீர்மானிக்கப் போகின்றன.

இந்த மாற்றங்கள் அல்லது கொந்தளிப்புகள் எவையும் வெற்றிடத்தில் இருந்து தோன்றவில்லை. அவை அவற்றுக்கான தர்க்கபூர்வ வளர்ச்சிகளின் தவிர்க்கப்படவியலாத விளைவுகளே. அவை இந்த ஆண்டில் ஒன்றாகத் திரண்டு வெளிப்பட்டன என்பதே சரி.ஆனால் அவற்றின் தோற்றுவாய்கள் பல தசாப்தகாலதுக்கு முந்தியவை.

பொருளாதார நெருக்கடி வானத்திலிருந்து தோன்றவில்லை. ராஜபக்சக்கள் கூறியது போல அது வைரஸினால் வந்ததும் அல்ல. அல்லது வெரிட்டே ரிசேர்ச் இன்ஸ்டிட்யூட் கூறுவதுபோல 2019இல் கோட்டாபய வரியைக் குறைந்ததால் மட்டும் தோன்றவில்லை. அல்லது ஈஸ்டர் குண்டு வெடிப்பின் விளைவாக மட்டும் தோன்றவில்லை. மாறாக அதன் வேர்கள் மிக ஆழமானவை. வெளிப்படையானவை.ச ிங்கள பௌத்த பெருந் தேசிய வாதமும் அதன் தமிழ் நண்பர்களும் திட்டமிட்டு மறைபவை. ஆம். இனப்பிரச்சினை தான் பொருளாதார நெருக்கடியின் வேர் நிலைக் காரணம். தீர்க்கப்படாத இனப் பிரச்சினையின் மீது எனைய உப பிரச்சினைகள் பிதிபலித்தன என்பதே சரி. எந்த ஒரு குடும்பத்துக்கு சிங்கள மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கினார்களோ அதே குடும்பத்தை நாட்டை விட்டு துரத்தும் ஒரு நிலை ஏன் வந்தது என்பது முதல் கேள்வி. ராஜபக்ஷக்களுக்கு சிங்கள மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கியது

ஏனென்றால் அவர்கள் யுத்தத்தில் பெற்ற வெற்றிக்காகத் தான். ராஜபக்ஷக்கள் யுத்த வெற்றி வாதத்திற்கு தலைமை தாங்கினார்கள் .ஈஸ்ரர் குண்டு வெடிப்பின் மூலம் வெற்றி வாதத்தை 2020க்குப் புதுப்பித்தார்கள். கோவிட –19 இன் மூலம் அதை 2021க்குப் புதுப்பித்தார்கள். இவ்வாறு யுத்த வெற்றி வாதத்தை அவர்கள் புதுப்பித்த போதெல்லாம் சிங்கள மக்கள் அவர்களுக்குத் தேர்தல் வெற்றிகளைக் கொடுத்தார்கள்.

யுத்த வெற்றிவாதம் என்பது அடிப்படையில் தமிழர்களுக்கு எதிரானது. ஈஸ்டர் குண்டு வெடிப்புக்குப் பின் அது முஸ்லிம்களுக்கு எதிரானது. இவ்வாறு இரண்டு சிறிய தேசிய இனங்களுக்கும் எதிராக ஒரு இரும்பு மனிதனை தெரிந்தெடுத்த சிங்கள மக்கள் அதே இரும்பு மனிதனை நாட்டை விட்டு ஓட விரட்டினார்கள். இதன் பொருள் சிங்கள பௌத்த பெருந் தேசியவாதம் ஞானம் அடைந்து விட்டது என்பதல்ல. யுத்தத்தை வென்ற ஒரே தகுதி காரணமாக ராஜபக்சக்கள் நாட்டின் கருவூலத்தை திருடி விட்டார்கள் என்பது தான் அவர்களுடைய கோபம்.

இங்கு உற்றுக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், யுத்தத்தை வென்றமை எங்கே ஒரு தகுதியாக மாறுகிறது? என்பது தான்.ஆம்.யுத்த வெற்றி என்பது அடிப்படையில் தமிழ்மக்களுக்கு எதிரானது. தமிழ் மக்களுக்கு எதிரான வெற்றியைக் கொண்டாடும் ஒரு அரசியல் பரப்பில் தான் ராஜபக்சக்கள் சிங்கள மக்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வெல்ல முடிந்தது.

எனவே இங்கு பிரச்சினையாகவிருப்பது ஒரு குடும்பம் அல்ல. யுத்த வெற்றியைக் கொண்டாடும் இனவாத அரசியல் தான். இருந்த ஒரே தகுதி காரணமாக ஒரு குடும்பம் முறைகேடான ஆட்சியை நடத்துவது என்பதே சரி. எனவே சிங்கள மக்கள் போராட வேண்டியது இனவாதத்தை எதிர்த்து தான். ஆனால், யுத்த வெற்றியை சிங்கள மக்கள் இப்பொழுது நிராகரிக்கவில்லை. அது மஹிந்தவுக்கு தெரிகிறது. அதனால் தான் பிலிப்பைன்சில் மார்க்கோசின் மகன் வந்தது போல நாமலையும் ஒரு நாள் ஜனாதிபதியாக்கலாம் என்று அவர் கனவு காண்கிறார். எனவே சிங்கள மக்கள் ராஜபக்சக்களைத் துரத்தியமை என்பது அவர்களுடைய முறைகேடான நிர்வாகம் குடும்ப ஆட்சி போன்றவற்றுக்கு எதிராகத் தான். நிச்சயமாக யுத்த வெற்றி வாதத்துக்கு தலைமை தாங்கியதற்காக அல்ல. ஆனால் முறைகேடான ஆட்சியும் குடும்ப ஆட்சியும் யுத்த வெற்றியின் மூலம் தங்களை பலப்படுத்திக் கொண்டன என்பதே உண்மை.யுத்த வெற்றியின் மினுக்கத்துக்கு முன் ராஜபக்சக்களின் குடும்ப ஆதிக்கம் முதலில் சிங்கள மக்களுக்குத் தெரியவில்லை.

சாதாரண சிங்கள மக்கள் மட்டுமல்ல அரகலயவை வழிநடத்திய கட்சிகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் பொருளாதார நெருக்கடியின் மூல காரணங்கள் தொடர்பாக சரியான விளக்கம் இருக்கவில்லை. தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் தான் எல்லா பாவங்களுக்கும் முதல் பாவம் என்பதை அரகலயக்காரர்களில் அநேகர் இப்பொழுதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

தேர்தல் மூலம் வெற்றி பெற முடியாத இடதுசாரி அமைப்புகள் சில அரகலயவை பின்னிருந்து இயக்கின என்று ராஜபக்சக்கள் குற்றம் சாட்டினர். அவ்வாறு குற்றம் சாட்டப்பட்ட முன்னிலை சோசலிசக் கட்சி கூட, தமிழ்மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. சமஸ்டியை ஒரு தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. இது தான் அரகலயவின் அரசியல் நிலைப்பாடு. அதாவது 2022க்குப் பின்னரான சிங்கள பௌத்த தேசியவாதத்தின் நிலைப்பாடு அதுதான். அதனால் தான் தமிழ்மக்கள் அரகலயவுடன் முழுமையாக இணையவில்லை. அதாவது 2009க்குப் பின்னரும் வென்றவர்கள் தோற்றவர்கள் என்று இரண்டாகப் பிளவுண்டிருந்த நாடு அரகலயவின் போதும் போராட்டக்காரர்களும் விலகி நிற்கும் சாட்சிகளும் என்று இரண்டாகப் பிரிந்து நின்றது. மின்சாரம் இல்லாத இருண்ட இரவுகளில் மெழுகுதிரிகளுக்கும் பாண் துண்டுகளுக்குமாக தெருவில் இறங்கிப் போராடிய அரகலயகூட சிங்கள பௌத்த பெரும் தேசியவாத சிந்தனை கட்டமைப்பிலிருந்து திருப்பகரமான விதத்தில் விலகி வரவில்லை. அது தான் பிரச்சினை.



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

அந்த சிந்தனைக் கட்டமைப்புக்குள் பாதுகாப்பாக இருந்து கொண்டு சிந்திக்கும்வரை தமிழ் மக்களின் கவலைகளை, அச்சங்களை, காயங்களை விளங்கிக் கொள்ள முடியாது. இதனால் அரகலய தமிழ் மக்களை தன்னோடு முழுஅளவுக்கு இணைத்துக் கொள்ள முடியவில்லை. இச்சிறிய தீவின் நவீன வரலாற்றில் வந்த மிகக் கொந்தளிப்பான ஓராண்டில் கூட நாடு தமிழர்கள் சிங்களவர்கள் என்று இரண்டாகப் பிளவுண்டு நின்றது. அதாவது நாட்டின் மிகக் கொந்தளிப்பான ஓராண்டில் கூட நாடு இன ரீதியாக இரண்டாகப் பிறவுண்டிருந்தது.

அரகலயவின் பிரதான கோஷம் சிஸ்டத்தை மாற்றுவது என்பதாகும். ஆனால் அவர்கள் சிஸ்டம் என்று கருதியது எதனை? ஆட்சி நிர்வாகத்தை தான். அரசுக் கட்டமைப்பை அல்ல. சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பையல்ல. அங்கே தான் அடிப்படைத் தவறு நிகழ்ந்தது. அவர்கள் அந்தக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக இருந்தார்கள். அதிலிருந்து விடுபட்டு அதையே எதிராக பார்க்க அவர்களால் முடியவில்லை. நாட்டில் அடிப்படையான அரசுக் கட்டமைப்பு மாற்றத்தை வேண்டி அவர்கள் போராடவில்லை. அரகலயவுக்குள் தீவிர இடதுசாரிகளிலிருந்து தீவிர வலதுசாரிகள் வரை எல்லாரும் இருந்தார்கள். அது ஒரு கதம்பமான கலவை. அதனால், மேலிருந்து கீழ் நோக்கிய தலைமைத்துவ கட்டளைக் கட்டமைப்பு இருக்கவில்லை. பதிலாக பக்கவாட்டிலான இன்டர்நெட் போன்ற இறுக்கமில்லாத ஒரு வலையமைப்பே இருந்தது. அதனால் தான் ரணில் அதை இலகுவாக நசுக்கினார்.

இலங்கைத்தீவில் தோன்றிய நூதனமான பல முன்னுதாரணங்கள் கொண்ட படைப்புத்திறன் மிக்க ஓர் அறவழிப் போராட்டம் நசுக்கப்பட்டு விட்டது. கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் இலங்கைத்தீவு நான்கு போராட்டங்களை வெற்றிகரமாக நசுக்கியிருக்கிறது. ஜேவிபியின் இரண்டு போராட்டங்கள், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம்.அ ரகலய என்று அழைக்கப்பட்ட சிங்கள மக்களின் அறவழிப் போராட்டம் என்று நான்கு போராட்டங்களை நசுக்கியிருக்கிறது.

சிங்கள ஆட்சியாளர்கள் அதை அரசியல் வெற்றியாக கொண்டாடக் கூடும். ஆனால் அரை நூற்றாண்டு காலத்தில் நசுக்க நசுக்க மக்கள் ஏன் போராடுகிறார்கள் என்ற கேள்விக்கு அவர்கள் விடை கண்டு பிடிக்க வேண்டும். சிங்கள பௌத்த அரசியல் பண்பாடு யாரைத் தோற்கடிக்கின்றது? தன்னைத் தானே தோற்கடித்துக் கொண்டிருக்கிறதா? இந்த ஆண்டு பிறந்தபோது மக்கள் தெருக்களில் நீண்ட வரிசைகளில் நின்றார்கள். பால்மா இருக்கவில்லை. ஏழைகளின் வீடுகளில் பால்தேநீர் இருக்கவில்லை. இந்த ஆண்டு முடியும் போது முட்டை விலை உயர்ந்து விட்டது. ஏழைகளின் வீடுகளில் கேக் இல்லாத கிறிஸ்மஸோடு முடிகிறது இலங்கைத்தீவின் மிகக் கொந்தளிப்பான ஓராண்டு.

# இராணுவத்தில் மகன் - புரட்சிக் குழுவில் தந்தை:

## மியன்மாரில் ஒரு பாசப் போராட்டம்!

**ரெபேக்கா ஹென்ஸ்கே**



மியான்மரில் ஜனநாயக பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக கடந்த 2021ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ராணுவ புரட்சி வெடித்ததையடுத்து, ஓர் ஆயுத குழுவில் போ கியார் யெய்ன் இணைந்தார்.

அதைத் தொடர்ந்து நடந்த கொடூரமான உள்நாட்டுப் போர் அவரது குடும்பத்தைப் பிளவுபடுத்தியது. போ கியார் யெய்ன் இப்போது அவரது மகன் ராணுவ வீரனாக இருக்கும் ராணுவ ஆட்சிக்கு எதிராக போராடி வருகிறார்.

"உன்னை நினைத்து கவலைப்படுகிறேன். தந்தை என்பதால் நீ எனக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கலாம், ஆனால் நான் நிச்சயம் உன்னை விடமாட்டேன்"- காட்டில் ஓர் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து தனது மகன் நியி நியி-விடம் தொலைபேசியில் இவ்வாறு பேசிக் கொண்டிருந்தார் போ கியார் யெய்ன்.

"நானும் உங்களை நினைத்து கவலைப்படுகிறேன் அப்பா. ஒரு ராணுவ வீரன் ஆக வேண்டும் என என்னை ஊக்குவித்தது நீங்கள்தான்" என மறுமுனையில் இருந்து பதில் வருகிறது.

போ கியார் யெய்ன்னின் இரண்டு மகன்கள் ராணுவத்தில் உள்ளனர். மூத்த மகன் அவரது அழைப்புகளுக்கு பதிலளிப்பது இல்லை.

"ராணுவம் வீடுகளை அழித்துவிட்டன. அவற்றுக்கு தீ வைத்துவிட்டன" என்று கூறும் போ கியார் யெய்ன், தனது மகனை ராணுவத்தில் இருந்து வெளியேறுமாறு கேட்டுக்கொள்கிறார். 'ராணுவம் மக்களைக் கொல்கிறது, போராட்டக்காரர்களை அநியாயமாக சுடுகிறது, காரணமின்றி குழந்தைகளைக் கொல்கிறது, பெண்களை பாலியல் பலாத்காரம் செய்கிறது. அது உனக்கு தெரியாமல் இருக்கலாம்" என்று மகனிடம் கூறுகிறார்.

"அது உங்களின் பார்வையாக இருக்கலாம் அப்பா. நாங்கள் அப்படி பார்ப்பதில்லை" என்று தனது தந்தையின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு பதிலளிக்கிறார் நியி நியி. இத்தகைய மறுப்புகள் இருந்தபோதிலும், ராணுவத்தின் அட்டூழியங்கள் பரவலாகவும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டவையாகவும் உள்ளன.

இரண்டு மகன்களையும் சமாதானம் செய்ய தான் முயற்சிப்பதாகவும், அவர்கள் கேட்பதில்லை என்றும் கூறும் போ கியார் யெய்ன், "போரில் நாங்கள் சந்தித்துக்கொள்வது என்பது விதியின் வசம் உள்ளது" என்று தெரிவிக்கிறார்.

"கையளவு உள்ள காய்கறிகளில், இரண்டு அல்லது மூன்று சரியில்லாதவையாக உள்ளன. ஒரு குடும்பத்திலும் அப்படித்தான். சிலர் நல்லவர்களாக இல்லாமல் இருக்கலாம்" என்கிறார் அவர்.

போ கியார் யெய்ன் மற்றும் அவரது மனைவியின் யின் மைன்ட் ஆகியோருக்கு மொத்தம் எட்டு குழந்தைகள், அவர்களில் இரண்டு பேர் ராணுவத்துக்கு தேர்வு செய்யப்பட்டதில் அவர்கள் பெருமிதம் அடைந்தனர். மகன்களின் இராணுவ பட்டமளிப்பு விழாவின் புகைப்படங்களை போ கியார் யெய்ன் நினைவுச்சின்னமாக வைத்திருந்தார். இரண்டு மகன்களும் அதிகாரிகள் ஆனார்கள்.

மகன்கள் ராணுவ வீரர்களாக இருந்தது பெருமையாக இருந்ததாக கூறுகிறார் அவர். மத்திய மியான்மரின் இந்தப் பகுதியில் உள்ள மக்கள் தங்கள் கிராமங்களுக்குள் இராணுவத்தை மலர்கள் கொடுத்து வரவேற்ற காலம் அது.

யின் யின் மைன்ட் கூறுகையில், முழுக் குடும்பமும் வயல்களில் வேலை செய்து பணம் சம்பாதித்ததால் இரண்டு மகன்களும் படித்து ராணுவத்தில் சேர முடிந்தது என்றார்.

உள்நாட்டுப் போருக்கு முன்பு, மியான்மரின் ஆயுதப் படைகள் என அழைக்கப்படும் டாட்மடாவில் வேலை பார்ப்பது என்பது குடும்பத்திற்கு உயர்ந்த சமூக மற்றும் பொருளாதார நிலையைக் கொண்டுவரக் கூடியதாக இருந்தது. ஆனால் கடந்த ஆண்டு நிகழ்ந்த ஆட்சிக்கவிழ்ப்பு எல்லாவற்றையும் மாற்றிவிட்டது.

நிராயுதபாணியான ஜனநாயக சார்பு எதிர்ப்பாளர்களை ராணுவம் இரக்கமின்றி ஒடுக்குவதை போ கியார் யெய்ன் பார்த்தபோது, அவர் இனி அவர்களுக்கு ஆதரவளிக்க முடியாது என்று முடிவு செய்ததோடு, தனது மகன்களை ராணுவத்தை விட்டு வெளியேறுமாறு வலியுறுத்தினார்.

'ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை ஏன் சுட்டுக் கொன்றார்கள்? ஏன் சித்ரவதை செய்தார்கள்? ஏன் காரணமின்றி மக்களைக் கொல்கிறார்கள்?" காட்டில் தனது முகாமில் வெற்றிலை பாக்கை மென்றபடி போ கியார் யெய்ன் கேட்கிறார். இவை அனைத்தாலும் தான் மனம் நொறுங்கிவிட்டதாக அவர் கூறுகிறார்.

இராணுவப் புரட்சிக்கு முன், போ கியார் யெய்ன் ஒரு விவசாயி, அவர் துப்பாக்கி ஏந்தியதில்லை. இப்போது, அவர் ஒரு போராட்டப் பிரிவின் தலைவர். அவர்கள் மக்கள் பாதுகாப்புப் படைகள் (PDF) எனப்படும் இயக்கத்தின் ஒரு பகுதியாக உள்ளனர், அவர்கள் மிகப் பெரிய மற்றும் சிறந்த ஆயுதம் கொண்ட ராணுவத்திற்கு எதிராக ஜனநாயகத்தை மீட்டெடுக்க போராடி வருகின்றனர்.

ராணுவ வீரர்களை நாய்கள் என இழிவாக குறிப்பிடும் அவர், 'ஒரு கிராமத்திற்கு நாய்கள் வரும்போது, அவர்கள் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்கிறார்கள், அவர்கள் வீடுகளை எரிக்கிறார்கள் மற்றும் சொத்துக்களை சூறையாடுகிறார்கள்... நாம் அவர்களுக்கு எதிராக நிற்க வேண்டும்," என்று போ கியார் யெய்ன் கூறுகிறார்.

தங்களை காட்டுப் புலிகள் என்று அழைக்கும் சுமார் 70 ஜனநாயக சார்பு போராளிகளைக் கொண்ட ஒரு பிரிவிற்கு போ கியார் யெய்ன் தலைமை தாங்குகிறார். அவர்களிடம் மூன்று தானியங்கி துப்பாக்கிகள் மட்டுமே உள்ளன.

அவருடைய மற்ற நான்கு மகன்களும் சண்டையில் அவருக்கு பக்க துணையாக உள்ளனர். ராணுவத்தில் உள்ள இரண்டு மகன்களும் அவர்களின் கிளர்ச்சியாளர் தளத்திலிருந்து 50 கிமீ (30 மைல்) தொலைவில் உள்ளனர்.

'ராணுவத்தில் உள்ள எங்களின் மகன்களை நம்பலாம் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால் இப்போது அவர்களே எங்களுக்கு சிக்கலாக மாறிவிட்டனர்" என்று யின் யின் மைன்ட் வேதனையுடன் கூறுகிறார்.

### மழையாக பொழிந்த துப்பாக்கி குண்டுகள்

பிப்ரவரி மாதத்தின் பிற்பகுதியில் ஒருநாள் அதிகாலை 3 மணியளவில், ராணுவம் தங்கள் மீது தாக்குதல் நடத்துவதாக அருகில் உள்ள கிராமத்தில் இருந்து போ கியார் யெய்ன் குழுவுக்கு தொலைபேசியில் அழைப்பு வந்தது. அப்போது எதிர் தரப்பில், 'எங்களுக்கு உதவி தேவை, நாய்கள் ஜசிப்பாய்கள் எங்கள் கிராமத்திற்குள் நுழைந்துவிட்டன, வந்து எங்களுக்கு உதவுங்கள்" என தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது மகன் மின் ஆங் முதலில் புறப்படத் தயாரானான். அவனைத் தடுக்க முடியாது என்பதை அறிந்த அவனுடைய தாய், அவன் பத்திரமாகத் திரும்ப வேண்டிக்கொண்டாள். காட்டுப் புலிகள் மோட்டார் சைக்கிள்களில் புறப்பட்டனர். தனது மகன் மின் ஆங்குடன் போ கியார் யெய்ன் படையை வழிநடத்தி சென்றார். முன்னொரு காலத்தில் அவர்கள் பதுங்கிருந்தபோது பாதுகாப்பாக இருந்த பாதை வழியாக அவர்கள் பயணம் மேற்கொண்டனர்.



'அங்கு ஒளிந்துகொள்ள எந்த இடமும் இல்லை. பெரிய மரங்களோ அல்லது எதுவுமே இல்லை" என்று தெரிவித்த மற்றொரு மகன் மின் நாயிங், "சோளத்தை பொரிப்பது போல் அவர்கள் எங்களை நோக்கி மளமளவென துப்பாக்கியால் சுட்டனர். நாங்கள் கொலைக்களத்தில் இருந்தோம். அவர்களின் ஆயுதங்களுக்கு எங்கள் ஆயுதங்களால் ஈடு கொடுக்க முடியவில்லை" என்று குறிப்பிடுகிறார்.

போ கியார் யெய்ன் தனது குழுவினரை பின்வாங்க உத்தரவிட்டார். அவர்கள் நெல் வரப்பில் ஒளிந்துகொண்டனர். "அவர்களில் யாரோ ஒருவர் என்னை அறிந்திருப்பதாக தோன்றியது" என்று கூறும் போ கியார் யெய்ன், தன்னை இலக்காக கொண்டே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் உணர்ந்ததாக தெரிவிக்கிறார். அவர்களை நோக்கி சுட்டுக்கொண்டே தான் ஓடியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த துப்பாக்கிச் சூடு சத்தங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு முகாமில் பதற்றத்தோடு யின் யின் மைன்ட் காத்திருந்துள்ளார். இது குறித்து அவர் கூறும்போது, "துப்பாக்கிச் சத்தம் தொடர்ந்து கேட்டது, அது மழை போல் ஒலித்தது" என்று கண்ணீருடன் தெரிவித்தார்.

இந்த திடீர் தாக்குதல் நிகழ்ந்த சில மணி நேரங்களில், ராணுவம் இறந்தவர்களின் புகைப்படங்களை பேஸ்புக்கில் வெளியிட்டது, 15 பேரைக் கொன்றதாக பெருமையாகக் கூறியிருந்தனர்.

அப்போதுதான் தனது இதயத்துக்கு மிகவும் நெருக்கமாக இருந்த மகனை இழந்துவிட்டதை யின் யின் மைன்ட் உணர்ந்தார்.

"என் மகன் என் மீது அதிக அக்கறை கொண்டிருந்தான். எனக்காக சமையலறையை சுத்தம் செய்வான், என் துணிகளை துவைப்பான். காயவைத்த என் சேலைகளை எடுத்து தருவான். என் மீது மிகவும் அன்பு வைத்திருந்தான் " என்று அவர் கூறுகிறார்.

ஜூன் மாதம், ராணுவத்தினர் அவர்களது கிராமத்தில் உள்ள 150 வீடுகளுடன் அவர்களின் வீடு மற்றும் உடைமைகள் அனைத்தையும் எரித்தனர். நாடு முழுவதும், குறிப்பாக மத்திய மியான்மரில் ராணுவ வீரர்களால் தீவைப்பு நடந்துள்ளது. கிளர்ச்சியில் போ கியார் யெய்னின் பங்கு குறித்து ராணுவத்தினர் நன்கு அறிந்திருப்பதாகவே தெரிகிறது. எனினும், ராணுவத்தில் அவரது மகன்கள் உள்ளனர் என்பது அவர்களுக்குத் தெரியுமா என்பது தெரியவில்லை என்கிறார்.

மியான்மரில் ராணுவம் ஆட்சியை கைப்பற்றியதில் இருந்து 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர், குறைந்தது 30 ஆயிரம் வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. ஆட்சி கவிழ்ப்புக்கு பின்னர், 2,500க்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டுள்ளனர் என சிறை கைதிகளுக்கான உதவி சங்கம் தெரிவித்துள்ளது. மோதல் கண்காணிப்பு குழுவான அக்லெட் இன் தரவுகளின்படி, இரு தரப்பிலும் உள்ள மொத்த உயிரிழப்பு புள்ளி விவரங்கள் 10 மடங்கு அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ராணுவம் போர்க்கள இழப்புகளை ஒப்புக்கொண்டது, ஆனால் அதுதொடர்பாக எந்த விவரங்களையும் வழங்கவில்லை.

### நீ உட்பட யாரையும் விட மாட்டேன்

ராணுவத்துக்கு எதிராக அதிகரித்துவரும் கிளர்ச்சி நிச்சயம் வெற்றி பெறும் என்றும் மீண்டும் குடும்ப வீட்டை கட்டுவோம் என்றும் நம்புவதாக போ கியார் யெய்ன் கூறுகிறார்.

ஆனால், உள்நாட்டு போர் தீவிரம் அடைந்துவருவதால் இதற்கு நீண்ட காலம் ஆகலாம். அவரது இரண்டு மகன்களும் ராணு வத்தை விட்டு வர மறுப்பதால் குடும்பம் பிளவுப்பட்டு உள்ளது. "நாங்கள் விருப்பப்பட்டு ராணுவத்துக்கு எதிராக போராடவில்லை.

உங்கள் தலைவர்கள் சரியாக இல்லை என்பதால் நாங்கள் போராடுகிறோம். உங்களால்தான் உன் சகோதரன் கொல்லப்பட்டான்" என்று ராணுவத்தில் உள்ள தனது மகனிடம் போ கியார் யெய்ன் தெரிவிக்கிறார்.

தனது சகோதரர் இறந்தது தனக்கு தெரியும் என்று நியி நியி கூறுகிறார். அப்போது, " உன் சொந்த கிராமத்தை வந்து பார். அனைத்தும் சாம்பலாகிவிட்டது. உன் புகைப்படங்களை கூட எங்களால் காப்பாற்ற முடியவில்லை. என் இதயம் வலியால் துடிக்கிறது." என்று அவரிடம் போ கியார் யெய்ன் ஆவேசத்துடன் தெரிவிக்கிறார்.

பின்னர், தனது மகனுக்கு எச்சரிக்கை விடுக்கும் விதமாக, "நீங்கள் என் பகுதிக்கு வந்து போரைத் தொடங்கினால், நீ உட்பட யாரையும் விடமாட்டேன். நான் மக்களுடன் மட்டுமே நிற்பேன் - என்னால் உங்களுடன் நிற்க முடியாது," என்று கூறி அழைப்பை துண்டித்தார். **(பிபிசி)**



**இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!**

# இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகளும் ஜே.வி.பி.யும்

கட்டுரையாளர்:
கொழும்பில் இருந்து
- வீ.தனபாலசிங்கம் -



பல தசாப்தகாலமாக நீடிக்கும் சிக்கலான தேசிய இனப்பிரச்சினைக்கு திகதி குறிப்பிட்டு ஒரு போதும் அரசியல் தீர்வைக் காண முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். என்றாலும், இலங்கையின் 75 வது சுதந்திரதினம் (4 பெப்ரவரி 2023) அளவில் தீர்வைக் காண்பது தனது நோக்கம் என்று கூறிக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் பாராளுமன்ற கட்சிகளின் மகாநாட்டைக் கூட்டினார். அது பெருமளவுக்கு சுமுகமாகவே முடிந்தது.

அடுத்த சுற்றுப் பேச்சு எப்போது என்று திகதி குறிப்பிடப்படவில்லை. ஆனால், திடீரென்று விக்கிரமசிங்க கடந்த புதன் கிழமை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை அழைத்துப் பேசினார். ஜனவரி முதல் தொடர்ச்சியாக பல கட்டங்களில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவிருப்பதாக அரசாங்கத் தரப்பில் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி கூறியதாக செய்திகள் வெளியாகின.

இந்த தடவை இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதை நோக்கிய முயற்சியில் ஒரு முக்கியமான அம்சத்தை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் மாத்திரமே மகாநாடு மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்தது.

கடந்த காலத்தில் சர்வகட்சி மகாநாடுகளுக்கு பாராளுமன்றத்துக்கு வெளியில் இருக்கும் அரசியல் கட்சிகளும் தேசியவாத மற்றும் மத அமைப்புக்களும் அழைக்கப்பட்டதால் தீர்வு முயற்சிகள் குழப்பமடைந்ததே வரலாறு. அடுத்தடுத்த கட்டங்களில் எத்தகைய அணுகுமுறையை ஜனாதிபதி கடைப்பிடிக்கப் போகிறார் என்று தெரியவில்லை. ஆனால், நிலைபேறான அரசியல் தீர்வொன்றைக் காண்பதை நோக்கிய நீண்ட செயன்முறைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான சுமுக சூழலை உருவாக்குவதற்கு பாராளுமன்ற கட்சிகளுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக பேச்சுவார்த்தைகளை தொடருவதே உகந்ததாக இருக்கும்.

இந்த மகாநாட்டில் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)யையும் அதன் முன்னாள் தோழரான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில போன்ற கடும்போக்கு தேசியவாதிகளை தவிர ஏனைய பாராளுமன்ற கட்சிகளின் தலைவர்களும் பல உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அவர்கள் இருவரும் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான தங்களது நிலைப்பாடுகளைக் கைவிட்டால் அரசியலில் எதிர்காலம் இல்லாமல் போகக் கூடியவர்கள். அதனால் மகாநாட்டுக்கு அவர்கள் வராமல் விட்டதை புரிந்து கொள்ள முடியும்.

ஆனால், ஜே.வி.பி. கலந்து கொள்ளாதது பெரும்பாலும் காரணம் காட்ட இயலாததாகும். அதன் தலைவர்கள் கலந்து கொண்டிருக்க முடியும் கலந்து கொண்டிருக்கவும் வேண்டும். அண்மைய மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு தென்னிலங்கையில் மக்கள் மத்தியில் ஜே.வி.பி.யின் செல்வாக்கு கணிசமானளவுக்கு அதிகரித்திருப்பதாக கருதப்படும் நிலையில் மாற்று தேசிய அரசியல் சக்தியாக தங்களை முன்னிலைப்படுத்தி அதன் தலைவர்கள் நாட்டை ஆட்சி செய்வதற்கு வாய்ப்பைத் தருமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்து வரும் நிலையில் சர்வகட்சி மகாநாடு போன்ற முக்கியமான செயன்முறைகளை புறக்கணிப்பது பிரதான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய பொறுப்பை தட்டிக் கழிப்பதற்கு ஒப்பானதாகும்.

ஜே.வி.பி.யின் தலைவர்கள் ஜனாதிபதி கூட்டிய மகாநாட்டில் கலந்து கொண்டு அந்த செயன்முறையை ஆட்சேபிப்பதற்கான காரணத்தையாவது விளக்கிக் கூறி தங்களது மாற்று யோசனையை முன் வைத்திருக்கலாம். மாற்றமடைந்திருக்கும் அரசியல் கோலங்களுக்கு மத்தியில் தங்களது முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கு கிடைத்த வாய்ப்பை அந்த தலைவர்கள் தவற விட்டு விட்டார்கள் என்று தான் கூறவண்டும்.

இன்னமும் கூட காலம் கடந்து விடவில்லை. தங்களது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்து அவர்கள் அடுத்த கட்ட பேச்சுக்களில் பங்கேற்க முடியும். பொதுத்தேர்தல் விரைவாக



நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வரும் ஜே.வி.பி. தற்போதைய பாராளுமன்றம் மக்களின் ஆணையை இழந்து விட்டது என்ற நிலைப்பாட்டைக் கொண்டது. அந்த பாராளுமன்றத்தினால் தெரிவான ஜனாதிபதிக்கும் மக்கள் ஆணை கிடையாது என்று கூறும் அதன் தலைவர்கள் அவரின் பதவிக்கு ஒரு நியாயப்பாட்டைக் கொடுப்பதாக அமைந்து விடக்கூடாது என்பதற்காக மகாநாட்டில் பங்கேற்காமல் இருந்திருக்கக்கூடும் என்று சில அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

மறுபுறத்தில், தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரப்ப ரவலாக்கல் ஏற்பாடுகளை எதிர்ப்பதன் காரணமாகவே மகாநாட்டை அவர்கள் புறக்கணித்தார்கள் என்ற வலுவான ஐயம் சிறுபான்மைச் சமூகங்களுக்கு ஏற்படுவதையும் தவிர்க்கமுடியாது.

கடந்த நூற்றாண்டின் பின் அரைக் கூறில் இரண்டு ஆயுதக் கிளர்ச்சிகளை முன்னெடுத்த ஜே.வி.பி. மார்க்சிய லெனினிச கொள்கைகளைப் பின்பற்றுவதாக கூறிக் கொள்கின்ற போதிலும், சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் முற்போக்கான கொள்கையை ஒரு போதும் கொண்டிருக்கவில்லை என்று ஒரு வரலாறு இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வாக 1957 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது ஜே.வி.பி. இருக்கவில்லை. ஆனால், 1965 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட டட்லி சேனநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்து கொழும்பில் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியும் பிரதான இடதுசாரிக் கட்சிகளும் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஜே.வி.பி.யின் தாபக தலைவர் ரோஹண விஜேவீர பங்கேற்றார்.

அப்போது என்.சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் கழகத்தின் முக்கியமான ஒரு தலைவராக விஜேவீர இருந்தார். இனவாத நோக்கில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் அதன் உறுப்பினர் எவரும் பங்கேற்கக்கூடாது என்று கட்சி எடுத்த முடிவையும் மீறி அதில் அவர் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

1971 ஏப்ரில் கிளர்ச்சிக்கு பிறகு சிறிமா அரசாங்கத்தினால் சிறையில் அடைக்கப்பட்ட ஜே.வி.பி. தலைவர்களையும் உறுப்பினர்களையும் 1977 பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்தன அரசாங்கம் விடுதலை செய்தது. அதற்கு பிறகு ஜனநாயக அரசியலில் இறங்கிய போதிலும் ஜே.வி.பி. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கங்கள் முன்னெடுத்த எந்தவொரு முயற்சியையும் ஆதரிக்கவில்லை. ஜெயவர்தன அரசாங்கம் 1980களின் முற்பகுதியில் மாவட்ட சபைகளை அறிமுகப்படுத்திய போது அதை எதிர்த்து ஜே.வி.பி. தென்னிலங்கை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்தது. 1987 ஜூலையில் ஜெயவர்தனவும் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் இந்திய இலங்கை சமாதான உடன் படிக்கையை செய்து கொண்ட போது ஜே.வி.பி. தலைமறைவு இயக்கமாக செயற்பட்டபோதிலும் நாட்டை இரத்தக் களரியில் மூழ்கடித்தது. 'இந்திய விஸ்தரிப்பு வாதத்துக்கு' எதிராக தீவிரமாக பிரசாரம் செய்த அவர்கள் இந்திய பொருட்களை பகிஷ்கரிக்குமாறு மக்களைக் கேட்டுக 'கொண்டதுடன் சமாதான உடன்படிக்கையை ஆதரித்த சிங்கள அரசியல்வாதிகள் பலரை படுகொலை செய்தனர்.

அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபைகளை எதிர்த்த ஜே.வி.பி. அவற்றை நாட்டுப் பிரிவினையை நோக்கிய ஒரு அடியெடுத்துவைப்பு என்று வர்ணித்தது. கிளர்ச்சியை பிரேமதாச அரசாங்கம் கொடூரமான முறையில் ஒடுக்கியது. 1989 நவம்பரில் தலைவர் விஜேவீரவும் கொல்லப்பட்டார்.

அதையடுத்து ஒரு ஐந்து வருடங்கள் 'உறங்குநிலையில்' இருந்த ஜே.வி.பி.யினர் 1994 முதல் மீண்டும் ஜனநாயக அரசியலுக்கு வந்தனர். ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் மாகாணசபைகள் உட்பட சகல தேர்தல்களிலும் அவர்கள் போட்டியிட்டார்கள். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் போர்நிறுத்த உடன்படிக்கையை செய்து கொண்டு நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுத்த சமாதான முயற்சிகளுக்கு எதிரான போராட்டங்களில் ஜே.வி.பி. முன்னரங்கத்தில் நின்றது. அந்த போராட்டங்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு முயற்சிக்கும் எதிராக சிங்கள மக்கள் மத்தியில் கடுமையான உணர்வுகளை ஏற்படுத்தின.

பிறகு சந்திரிகா அரசாங்கத்துடன் அரசியல் கூட்டணியொன்றை ஏற்படுத்திக் கொண்ட ஜே.வி.பி.யின் தலைவர்கள் அமைச்சர் பதவிகளையும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், 2004 சுனாமியினால் வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு ஏற்பாடுகள் குறித்து விடுதலை புலிகளுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையை ஆட்சேபித்து அவர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறினார்கள்.

2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் நோர்வே அனுசரணையுடனான சமாதான முயற்சிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை பிரதான பிரசாரமாக முன்னிறுத்தி போட்டியிட்ட மகிந்த ராஜபக்சவை ஆதரித்த ஜே.வி.பி. அவரது அரசாங்கத்தில் பங்கேற்கா விட்டாலும் முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்ட போரை உறுதியாக ஆதரித்தது. ஜே.வி.பி.யின் இந்த சுருக்கமான வரலாறு தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான எந்த முயற்சியையும் ஒருபோதுமே ஆதரிக்காத சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை ஆதரிக்கின்ற முற்போக்கு சக்திகளுடன் தன்னை ஒருபோதுமே அடையாளப்படுத்திக்கொள்ளாத ஒரு அரசியல் கட்சியாக அதை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது. இந்த வரலாற்றை மாற்றியமைக்க வேண்டிய காலம் வந்து விட்டது என்பதை ஜே.வி.பி.யின் இன்றைய தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் கடந்த கால தவறுகளை திருத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு முன்னெடுக்கப்படக் கூடிய முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

தீர்வு முயற்சிகளுக்கு சிங்கள மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க குறைந்த பட்சம் 13வது திருத்தத்தையாவது முழுமையாக நடைமுறைப்படுத்துவற்கு தென்னிலங்கையில் கருத்தொருமிப்பை ஏற்படுத்த ஜே.வி.பி.யினால் பெருமளவு பங்களிப்பைச் செய்யமுடியும். காலம் வேண்டிநிற்கும் அரசியல் கடமையை நிறைவேற்ற அதன் தலைவர்கள் முன்வருவார்களா? நன்றி: வீரகேசரி


## மனோஜர் உடனடியாகத் தேவை

கனடாவில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் திருச்செந்தூர் முருகன் ஆலயத்திற்கு முழுநேர - பகுதி நேர முகாமையாளர்கள் தேவை. சைவசமய ஆசாரசீல ஒழுக்கமுள்ளவராகவும் ஆங்கில தமிழ் மொழி வளமுள்ளவராகவும் இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- செயலாளர் 547 465 3720

## ஸ்காபரோவில் வயோதிப மாதுவை வீட்டில் வைத்து பகலில் பராமரிக்க ஒருவர் உடனடியாகத் தேவை

ஸ்காபரோவில் கெனடி - பின்ஞ்ச் பகுதியில் நல்ல வசதிகளுடன் அமைந்துள்ள வீட்டில் உள்ள வயோதிபத் தாய் ஒருவரை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பராமரிக்க ஒருவர் உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- பரா 416 841 9600

EELANADU 30 Dec 2022 ஈழநாடு

# உள்ளூராட்சி மன்றங்களையே நிர்வாகிக்க முடியாதவர்களாக......

கட்டுரையாளர்:
– மாலினி அஜந்தன் –

உலக வங்கி அண்மையில் வடக்கு – கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள சில உள்ளூராட்சி மன்றங்களின் செயல்திறனை அடிப்படையாக வைத்து ஒரு புள்ளியிடலை வழங்கி, தரப்படுத்தல் பட்டியலொன்றைத் தயாரித்தது.

அந்த பட்டியலில் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை, மிக முக்கியமான வருமானம் ஈட்டக்கூடிய சபைகள் என கணிக்கப்படும் பல சபைகளும் எதிர் பார்த்த இடங்களை அடையவில்லை.

வடக்கு மாகாணத்திற்கான புள்ளிப் பட்டியலில் முதலிட்தை வலிகாமம் வடக்குப் பிரதேச சபை பெற்றுக் கொண்டது. வலிகாமம் வடக்குப் பிரதேச சபையைப் பொறுத்தவரை அதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு சபை. முக்கியமாக மீள்குடியேற்றப் பிரதேசத்தை உள்ளடக்கிய சபை. ஆனாலும் அவர்களின் செயற்திறன் வீச்சு என்பது, யாழ்.மாவட்டத்தின் முக்கிய சபையாகப் பார்க்கப்படும் யாழ்.மாநகர சபையைப் பார்க்கிலும் அதிகமாகக் காணப்படுகின்றது.

இந்த தரப்படுத்தலில் யாழ்.மாநகர சபைக்குக் கிடைத்த இடம் 26. இந்தப் பின்னடைவு ஏன் ஏற்பட்டது? என்பது ஆராயப்பட வேண்டிய முக்கியமான விடயமாகும்.

வடக்கு மாகாணத்தின் பிரதான சபை எனக் கொள்ளப்படும் யாழ்.மாநகர சபையை, யுத்தத்திற்கு பின்னர் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் தமது ஆட்சியின் கீழ் வைத்திருக்கக் கிடைத்த சந்தர்ப்பங்கள் மிக அரிதானவையே. அவ்வாறு கிடைத்த சந்தர்ப்பங்களிலும் கட்சி அரசியல் வேணவாக்களால், யாழ்ப்பாணம் மாநகர சபை செயற்றிறனை இழந்துள்ளது என்றே நோக்க நேரிடுகிறது.

எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற சட்ட ஏற்பாடுகளால், உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் முனைப்புக்கள் தீவிரம் பெற்றுள்ளன. கடந்த வாரம் கூட உள்ளூராட்சித் தேர்தலை எதிர் கொள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் வகுக்க நினைக்கும் விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தோம். தேர்தல் வியூகங்களுக்கு அப்பால், இந்தக் காலகட்டங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகள் உள்ளூராட்சி மன்றங்களில் எப்படிச் செயலாற்றின என்பது ஆராய் பட வேண்டியதாக இருக்கின்றது.

2018ம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தல் இடம் பெற்ற போது, தேர்தல் முறை காரணமாக கட்சிகள் தனித்து ஆட்சியமைப்பது சவாலாகக் காணப்பட்டது. பூநகரி பிரதேச சபை, ஊர்காவற்றுறை பிரதேச சபை என்பவற்றைத் தவிர ஏனைய சபைகளில் ஆட்சியமைப்பது என்றால் பிறிதொரு அரசியல் கட்சியில் தங்கியிருக்க நேரிட்டது. இதனால், தமது கொள்கைகளை மாத்திரம் முன்னிறுத்த முடியாது கட்சிகள் திண்டாடின.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திண்டாடியது. ஏனெனில் வடக்கில் பெருமளவான சபைகளில் கூட்டமைப்பு ஆட்சியமைப்பதற்கு பல இடங்களில் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் உதவின.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அடுத்த படியாக அதிக இடங்களை வென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை. ஏலவே கூறியதைப் போல பிறிதொரு கட்சி கை கொடுத்தாலே ஆட்சியமைக்க முடியும் என்ற யாதார்த்தத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நன்கு புரிந்து



கொண்டதால் தான், அவர்கள் கூட தாம் கூட்டமைப்பிற்கு அடுத்த படியாக ஆசனங்களைக் கைப்பற்றிய ஒவ்வொரு சபைகள் தோறும் வேட்பாளர்களை நிறுத்தினர். ஆனால் யாரும் ஆதரவு வழங்க முன்வராததால் அவர்களது எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏனைய கட்சிகள் வழங்கிய ஆதரவு நிலைப்பாடு தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றம் சுமத்தவும் தவறவில்லை.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் இந்தத் தடுமாற்றம், உள்ளூராட்சி மன்றங்களின் வினைத் திறனான செயற்பாடுகளைப் பாதிக்கும் வகையில் அமைந்தது. கட்சிப் போட்டிகளே மேலெழுந்தன. கட்சிகளுக்கு இடையிலான போட்டியிலும், தனிப்பட்ட நபர்கள் மீதான காழ்ப்புணர்ச்சி மீதும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அக்கறை காட்டியதால், அபிவிருத்திக்கே உரிய களமான உள்ளூராட்சி சபைகளின் நீண்டகால செயற்பாடுகள் தொடர்பில் சிந்திக்கத் தவறினர்.

எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடாத்தப்படும் என, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அடிக்கடி பல இடங்களிலும் தெரிவித்து வரும் ஏககாலத்தில், யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் பருத்தித்துறை நகர சபை என்பனவற்றின் அடுத்த ஆண்டிற் கான வரவு, செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

2018ஆம் ஆண்டு இடம் பெற்றிருந்த உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர், யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவுடன் அமைத்திருந்த நிலையில், 2020ஆம் ஆண்டு கூட்டமைப்பின் முதல்வராக இருந்த இமானுவேல் ஆனோல்டினால் கொண்டு வரப்பட்ட வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டு அவர் ஆட்சியை இழந்திருந்தார்.

இந்நிலையில் மீண்டும் சபை முதல்வர் தெரிவு இடம் பெற்றிருந்த நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த மணிவண் ணன் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சியைத் தொடர்ந்தார். அந்தத் தெரிவின் போது ஈ.பி.டி.பி கட்சி, தற்போதைய முதல்வர் மணிவண்ணனுக்கு சார்பாக வாக்களித்த நிலையில் அதிகாரப் பகிர்விற்காக காத்திருக்கும் இனம், கிடைத்திருக்கக்கூடிய உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகளில் உரிய பெறுபேறுகளை எட்டத் தவறிவரும் செயற்பாடானது, தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வுக் கோசத்தை மலினப்படுத்துவதாக உள்ளது

அதன் தொடர்ச்சியாக பல்வேறு விமர்சனங்களை மணிவண்ணன் தரப்பினர் எதிர் கொண்டிருந்தாலும், தற்போது வரை ஆட்சி தொடர்கிறது. இருப்பினும் கடந்த 21ஆம் திகதி யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வரான மணி வண்ணனால் கொண்டு வரப்பட்ட அடுத்த ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டம் ஈ.பி.டி.பி வெளிநடப்புச் செய்ததால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் முடிவடைவதற்குள் மீண்டும் திருத்தங்களுடன் அந்த வரவு, செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டும். அப்போது இந்த வரவு, செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் தற்போதைய முதல்வர் வி. மணிவண்ணன் ஆட்சியை இழப்பார்.

பருத்தித்துறை நகர சபையைப் பொறுத்தவரை, 15 உறுப்பினர்களைக் கொண்ட அந்த சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஏனைய கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் ஆட்சியமைத்திருந்தது. எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த பருத்தித்துறை நகர சபை உறுப்பினர்கள், கூட்டமைப்பு சார்பாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த நகர பிதா ஆளுமையற்றவர் என்றும், அங்கு ஊழல் இடம் பெறுவதாகவும் தொடர்ந்து விமர்சித்து வரும் நிலையில், இம்மாதம் 5 ஆம் திகதி அடுத்த வருடத்திற்கான வரவு, செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ கட்சியைச் சேர்ந்த நகரமாலினி அஜந்தன் சபை உறுப்பினர் ஒருவர், அந்த வரவு, செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்திருந்த நிலையில் அது தோற்கடிக்கப்பட்டது.

இதனையடுத்து 14 நாட்கள் கடந்து இம்மாதம் 19ஆம் திகதி திருத்தங்களுடன் மீண்டும் வரவு, செலவுத் திட்டம் சபையில் கொண்டு வரப்பட விருந்த நிலையில், அன்றைய தினம் காலையில் நகர பிதா ஜோசப் இருதயராஜா தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார். இதனையடுத்து வரும் 27ஆம் திகதி, புதிய நகர பிதா தெரிவுக்காக பருத்தித்துறை நகர சபை கூடவுள்ளது.

அரசியலை எவ்விதத்திலும் மேற் கொள்ள முடியாது அபிவிருத்திகளை மாத்திரமே மேற் கொள்ளக்கூடிய உள்ளூராட்சி சபைகளில் கட்சிகள் தமக்குள்ளேயே ஒற்றுமை இன்றிச் செயற்பட்ட தால் ஏற்பட்ட விளைவுகள் கட்சிகளின் ஒற்றுமையை மாத்திரமின்றி, தமக்குள்ள அதிகாரப் பரப்பிற்குள், குறிக்கப்பட்ட ஆட்சிக் காலத்திற்குள் உள்ளூராட்சி மன்றங்களால் நிறைவேற்ற இயலுமாகவுள்ள உட்கட்டுமான அபிவிருத்திகளை மேற் கொள்வதற்குக் கூட வழிவகுக்காமல் போயுள்ள விடயங்கள் தான் உண்மையில் வருதத்திற்குரியவை. இப்போது உலக வங்கியின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தரப்படுத்தலில், தமது பொருத்தமான வருமான ஈட்டத்தைக் காண்பிக்கத் தவறியுள்ள சபைகளே பெரும் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளன என்பது கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய விடயம்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை வலிகாமம் வடக்குப் பிரதேச சபை அதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு சபையாக இருந்தும், தமது செயற் திறன் வீச்சினால் இத்தரப்படுத்தல் பட்டியலில் முதலிடத்தைப் பெற்று ஏனைய சபைகளுக்கு ஒரு முன்னுதாரண சபையாக விளங்கியிருக்கிறது என்றால் அது மிகையானதல்ல.

அபிவிருத்திக் களங்களில் அரசியல் செய்ய முற்படும் கட்சிகள் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியதிகாரங்களைப் பெற்றுக் கொண்டால், நிலைமை இவ்வாறு தான் இருக்கும். எனினும் அதே கட்சிகள் ஆட்சியிலிருக்கும் சில சபைகளில் அத்தகைய குழப்பங்கள் எதுவும் ஏற்படாது அபிவிருத்திகள் துரிதகதியில் முன்னெடுக்கப்படுவதும், மேலும் சில சபைகளில் பங்காளிக் கட்சிகளே தமக்குள்ளே மோதிக் கொண்டு செயற்திறனற்றுக் காணப்படுவதும் தமிழ் மக்களின் அரசியல் பரப்பில் ஆரோக்கியமான விடயமாக இருக்காது.

அத்தோடு ஒரு அதிகாரப் பகிர்விற்காக காத்திருக்கும் இனக்குழுமம், கிடைத்திருக்கக் கூடிய உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகளில் தமக்குள்ளான போட்டிகளாலும், அரசியல் தேவைகளாலும் உரிய அடைவு மட்டங்களை எட்டத் தவறி வரும் செயற்பாடானது, 75 வருடங்களாக ஏங்கிக் கிடக்கும் தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வுக் கோசத்தை மலினப் படுத்துவதாக உள்ளது. எதிர் வருகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலிலாவது தமிழ்த் தேசியக் கட்சித் தலைமைகள் இந்த விடயம் குறித்து சிந்திக்கத் தலைப்படுமா?

உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
“சங்கீத சங்கமம் 2023”
தொடர்புகளுக்கு 416 841 9600

# அரசியலில் சூழ்ச்சி?

ரணில் விக்கிரமசிங்க நரித்தனமாக தமிழர்களை ஏமாற்றப் போகின்றார். ஜெனிவாவை கையாளும் ஒரு உக்தியாகவே ரணில் ஒரு புதிய ஆட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார். விடயம் தெரியாமல் தமிழ் தலைமைகள் கொழும்பின் பொறிக்குள் சிக்கப் போகின்றன. இதன் மூலம் சர்வதேச அழுத்தங்கள் பலவீனமடையப் போகின்றது. இவ்வாறான கருத்துக்களை சிலர் முன்வைப்பதை காண முடிகின்றது..

அரசாங்கத்துடன் பேசுகின்ற ஒவ்வொரு சந்தர்பங்களிலும் இவ்வாறான கருத்துக்கள் வெளிவருவது சாதாரணமானது. ஒரு நம்பிக்கையற்ற சூழலில் இடம் பெறும் அனைத்துமே அவநம்பிக்கையினூடாகத் தான் நோக்கப்படும். அவ்வாறாயின் ரணில் சூழ்ச்சி செய்ய மாட்டாரா? இப்படி எவரேனும் கேட்டால் — பதில் சுலபமானது. அவர் நிச்சயம் சூழ்சிகள் புரிவார். அதில் நாம் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை.

ஏனெனில் அரசியல் என்பது எப்போதுமே அரசியல் தான். அரசியலும் சூழ்ச்சியும் பிரிக்க முடியாதவைகளாகும். அரசாங்கம் — ரணில், சூழ்சிகள் புரிவாரென்றால் அதனை முறியடித்து, தமிழ் மக்களின் நலன்களை வெற்றி கொள்வது தானே தமிழர்களின் அரசியல் கெட்டித்தனமாக இருக்க முடியும். சிங்கள ஆளும் வர்க்கம் மட்டுமல்ல, உலகில் அனைத்து ஆளும் தரப்புக்களும் சூழ்ழ்சிகளுடன் தான் வரும். ஒரு அடிப்படையான வேறுபாடுண்டு. நாம் சூழ்ச்சியாக விளங்கிக்கொள்வது, அவர்களது பார்வையில் ராஜதந்திரமாகும். ராஜதந்திர அரசியலை இரத்தமும் சதையுமாக புரிந்து கொள்வதாயின், தந்திரங்கள் இல்லாமல் ராஜ்யங்கள் இல்லை.

தந்திரங்கள் இல்லாமல் அரசியலுமில்லை. இராஜ்யங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் தந்திரங்களிலேயே தங்கியிருக்கின்றது. எனவே உணச்சிகளுக்கு பலியாகாமல் விடயங்களை நோக்கப் பழகுவோம்.

முதலில் சர்வதேச அழுத்தங்களை உற்று நோக்குவோம். இது தொடர்பில் பல்வேறு சந்தர்பங்களில் இந்தக் கட்டுரையாளர் குறிப்பிட்டிருக்கின்றார். உண்மையில் சில விடயங்கள் தமிழ் சூழலில் கூறியது கூறலாகவே இருக்கின்றது. உணர்சி வசப்பட்ட கருத்துக்கள் கூறியது கூறலாக தொடர்வதால், யதார்தங்களையும் திரும்பத் திரும்ப அழுத்தி கூறவேண்டியிருக்கின்றது.

சர்வதேச அழுத்தங்களை ரணில் பலவீனப்படுத்தி விடுவாரென்று நாம் கூறுகின்ற போது, ஒரு விடயத்தை நாம் ஏற்றுக ˙கொள்கின்றோம். அதாவது, ரணில் பலவீனப்படுத்தக் கூடியளவிற்கு, சர்வதேச அழுதங்கள் பலவீனமாக இருக்கின்றன. அந்தளவிற்கு அவை பலவீனமானவையா? இந்த அடிப்படையில் ஏன் எவரும் சிந்திப்பதில்லை? ரணில் விக்கிரமசிங்க வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள நாடொன்றின் ஜனாதிபதி. வெளிநாடுகளின் உதவிக்காக கையேந்திக் கொண்டிருக்கும் ஒருவர். இவ்வாறான ஒருவரால் பலம்பொருந்திய நாடுகளின் அழுத்தங்களை எவ்வாறு பலவீனப்படுத்த முடியும்?

ஈழத் தமிழர்களுக்கு உறுதியானதொரு அரசியல் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று மேற்குலகம் தீர்மானித்தால் அந்த தீர்மானத்தை ரணில் விக்கிரமசிங்கவினால் என்ன செய்து விட முடியும்? நிச்சயமாக முடியாது. எனவே மனித உரிமைசார்ந்த அழுத்தங்களை ரணில் விக்கிரமசிங்க சூழ்ச்சியால் மடை மாற்றி விட முடியாது. அடுத்தது, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தங்களது சொந்த நலன்களுக்காக காட்டிக் கொடுப்புக்களை செய்கின்றாரென்று எவரேனும் கூற முற்பட்டால், அதுவும் பலவீனமானதொரு வாதமாகும். ஏனெனில் நம் அனைவருக்குமே ஒரு விடயம் தெளிவாகத் தெரியும். கூட்டமைப்பினர், இந்தியாவையும் அமெரிக்காவையுமே நம்பி அரசியல் செய்பவர்கள். அவனின்றி அனுவும் அசையாதென்பது போல், அவர்களின்றி கூட்டமைப்பினர் அசையப் போவதில்லை.

உண்மையிலேயே சர்வதேச அழுத்தங்களை இறுக்கமாக பேணிக் கொள்ள அந்த நாடுகள் விரும்பினால், கூட்டமைப்பை அவர்கள் அதற்கேற்பவே



கையாண்டிருப்பர். அதில் எந்தவொரு தடையுமில்லை. ஆனால் அவர்களோ அரசாங்கத்தோடு பேசுமாறு கூட்டமைப்பை ஊக்குவிக்கின்றனர். இந்தப் பின்புலத்தில் நோக்கினாலும் ரணில் சர்வதேச அழுத்தங்களை பலவீனப்படுத்தவே, கூட்டமைப்புடன் பேசுகின்றாரென்பது, பலவீனமானதொரு வாதமாகும். ஏனெனில், விடயங்களை ஆழமாக நோக்கினால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடான அழுத்தங்களை பலவீனப்படுத்துவதற்கான துருப்புச் சீட்டுக்கள் எவையும் ரணிலிடம் இல்லை. ரணிலால் அது முடியாது.

2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர், ரணில் மற்றும் மங்களசமரவீர போன்றவர்களின் திறமையினால் அல்லது கூட்டமைப்பின் சதியால் விடயங்களில் மாற்றங்கள் ஏற்படவில்லை. தங்களுக்கு விருப்பமான ஆட்சியாளர்கள் பலமடைவதற்கும், முன்நோக்கி பயணிப்பதற்குமான கதவை பலம் பொருந்திய நாடுகள் திறந்து விட்டன. உண்மையில் உள்நாட்டில் முன்னேற்றங்களை காண்பிப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கினர். ஆனால் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் ஏற்படவில்லை.

ஒரு வேளை ரணில்-மைத்திரி அரசாங்கம் முரண்பாடுகளில்லாமல் நகர்ந்திருந்தால், இப்போது நாம் கூறிக் கொண்டிருக்கும் சர்வதேச அழுத்தங்களில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும் ஒரு குறிப்பிட்டளவில் மனித உரிமை சார்ந்த அழுத்தங்கள் இருந்து கொண்டேயிருக்கும். மனித உரிமைசார்ந்த அழுத்தங்கள் முற்றிலும் இல்லாமல் போய் விடாதென்பது சிங்கள ஆட்சியாளர்களுக்கு தெரியாத விடயமுமல்ல.

ஆனால் அந்த அழுத்தங்கள் தங்களால் கையாளக் கூடிய எல்லைக்குள் இருக்க வேண்டுமென்பது தான் அவர்களது விருப்பமாகும். ஏனெனில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களால் நாடுகளை கட்டுப்படுத்த முடியாது. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பலவீனத்தை புரிந்து கொள்வதற்கு, பேரவையின் முன்னை நாள் ஆணையாளர் நவிப்பிள்ளையின் கூற்றே போதுமானது. அதாவது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது, புவிசார் அரசியல் நலன்களாலும் குறுகிய தேசியவாத நலன்களாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது. இதற்கு தனது சொந்த நாடான தென்னாபிரிக்காவும் விதிவிலக்கல்ல.

இந்த யதார்தங்களை புரிந்து கொள்ளாத வாதங்களால் பயனில்லை. சர்வதேச அரசியல் சூழலை இரத்தமும் சதையுமாக நோக்க வேண்டும். அடிப்படையில் இந்த உலக அரசியல் ஒழுங்கானது, அரசுகளை பாதுகாக்கும் ஒழுங்காகும். இந்த ஒழுங்கில் அரசலாதவர்களிடம் என்னதான் நியாயங்கள் இருந்தாலும் கூட, அது சபையேறாது. இதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பே மிகச் சிறந்த உதாரணம். விடுதலைப் புலிகள் அமைப்பு மேற்குலகிற்கு எதிரான அமைப்பல்ல. இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புக்களுடன் ஒரு போதுமே விடுதலைப் புலிகள் அமைப்பை ஒப்பிட முடியாது. இது மேற்குலகத்திற்கும் தெரியாத விடயமல்ல.

எனினும் விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் யுத்தத்தை நோக்கி நகர்ந்த போது, அதுவரையில் விடுதலைப் புலிகளை கண்டும் காணாமல் விட்டிருந்த ஐரோப்பிய ஒன்றியமும், கடனாவும் விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் (பிரபாகரனின்) யுத்த முடிவை மறுபரீசீலனை செய்வதற்கானதொரு அழுத்தமாகவே மேற்படி தடை பிரயோகிக்கப்பட்டது. ஆனாலும் அதனை விடுதலைப் புலிகள் அமைப்பு பொருட்படுத்தவில்லை. ஒட்டுமொத்த மேற்குலகத்தினாலும் எதிர்க்கப்பட்ட பின்புலத்தில் தான், விடுதலைப் புலிகள் யுத்தகளத்தில் நிர்மூலமாக்கப்பட்டனர். மேற்குலகம் ஒட்டுமொத்தமாகவே விடுதலைப் புலிகளுக்கு எதிராக திரும்பிய போது, புலம்பெயர் சமூகத்தினால் அதனை தடுக்க முடியவில்லை.

இந்தக் காலத்தில் மேற்குலக ராஜதந்திரி ஒருவருடன் பேசிய அனுபவத்தை ஒரு நண்பர் பின்னர் பதிவு செய்திருந்தார். அதாவது, மகிந்த ராஜபக்ச அடிப்படையிலேயே மேற்குலகிற்கு எதிரான பார்வை கொண்டவர். அவ்வாறான ஒருவர் முன்னெடுக்கும் யுத்தத்ததை நீங்கள் ஏன் ஆதரிக்கின்றீர்கள்? இதற்கு அந்த ராஜதந்திரியின் பதில், பிரபாகரனை இப்போது மகிந்த பார்த்துக் கொள்ளட்டும் பின்னர் நாம் மகிந்தவை பார்த்துக் கொள்வோம். பலம் பொருந்திய நாடுகளின் சிந்தனையை புரிந்து கொள்வதற்கு இது ஒரு சிறந்த கூற்றாகும்.

ஏனெனில் தங்களது நலன்களை பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்களிடம் பல வழிமுறைகள் உண்டு. இறுதி யுத்தத்தின் போது, பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்படுவர் என்பதை அனைவருமே அறிந்திருந்தனர். உண்மையிலேயே அப்பாவி ஈழத்தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டுமென்று எண்ணியிருந்தால், உலகின் பலம் பொருந்திய நாடுகள் அழிவை தடுத்திருக்கலாம்.

ஆனால் அவ்வாறானதொரு யுத்த நிறுத்தம் ஏற்பட்டால் புலிகள் தப்பி விடுவார்கள் — முக்கியமாக பிரபாரனும் தப்பி விடுவார் என்னுமடிப்படையில் தானே தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. சாதாரண மக்களின் உயிர்களை கருத்தில் கொண்டு எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. ஏன் இவ்வாறு நடந்தது? ஏனெனில் சாதாரண அப்பாவி ஈழத் தமிழர்களின் உயிர்கள் உலகின் மூலோபாய நலன்களுக்கு தேவைப்படவில்லை. ருவாண்டா இனப்படுகொலையின் போது, ருவாண்டாவின் ஐ.நா அமைதிப் படை நடவடிக்கைக்கு பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல் ரோமியோ டலாரி இவ்வாறானதொரு இனப்படுகொலையை உலகம் நினைத்திருந்தால் தடுத்திருக்க முடியும். ஆனால் உலகம் தடுக்கவில்லை ஏனெனில் உலகின் மூலோபாய நலன்களுக்கு இந்தச் சிறிய ஆபிரிக்க நாட்டின் ஏழை மக்களின் உயிர்கள் தேவைப்பட்டிருக்கவில்லையென்று எழுதியிருந்தார்.

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



முள்ளிவாய்க்காலில் சிக்குண்டிருந்த ஈழத் தமிழ் மக்களின் நிலையும் இது தான். இறுதி யுத்தத்தின் போது, ஐ.நாவின் பேச்சாளராக இருந்த கோடன் வைஸ், 2011இல், புலிகளின் இரத்தம் என்னும் தலைப்பில் கட்டுரையொன்றை எழுதியிருந்தார்.

புலிகள் இல்லாத உலகம் முன்னரை விடவும் இப்போது சிறப்பாக இருக்கின்றதென்று அதில் குறிப்பிட்டிருந்தார். ஒரு மேற்கு நாட்டவரின் பார்வையின் எல்லை இதுதான். இதனை புரிந்து கொண்டு செயற்பட வேண்டியது நமது பணியாகும்.

இந்த பின்புலத்தில் நோக்கினால் சர்வதேச அழுத்தங்களின் எல்லைகளை கட்டுப்படுத்துவதற்கான எந்தவொரு துருப்புச்சீட்டும் எவரிடமுமில்லை. அவர்களுக்கு தேவையென்றால் அதனை குறைக்கவும், கூட்டவும் அவர்களால் முடியும். அவர்களால் மட்டும் தான் அது முடியும்.

அதற்காக பாதிக்கப்பட்ட தரப்பினர் அமைதியாக இருக்க வேண்டுமென்பதல்ல மாறாக, பாதிக்கப்பட்ட தரப்பினர் என்னதான் நியாயங்களை கூறினாலும் கூட, அந்த நியாயங்கள் மட்டும், உலகின் தீர்மானங்களை மாற்றுவதற்கு போதுமானதல்ல. ஆனால் இவ்வாறான அழுத்தங்களின் எல்லையை புரிந்து கொண்டு, அதற்கேற்ப செயற்பட வேண்டியது நமது கடமையாகும். அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் பேசத் தான் வேண்டும். அதனை கையாளத் தான் வேண்டும். சூழ்ழ்சிகளை எதிர்கொள்வதற்கு, சூழ்ழ்சியை எதிர் கொள்ளாமல் தப்பியோடுவது ஒரு உபாயமாகவே இருக்கவே முடியாது.


உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
“சங்கீத சங்கமம் 2023”



# இனப்பிரச்சனைக்கான தீர்வு முயற்சியும் வல்லாரசுகளின் அரசியல் போட்டியும்


கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்




இலங்கை அரசியலின் சமகாலம் பிராந்திய, சர்வதேச் சக்திகளின் தலையீடு அதிகரித்துள்ள காலப்பகுதியாகக் காணப்படுகிறது. 2009 போரின் முடிவும் 2022 ராஜபக்ஷக்களின் ஆட்சிப் பறிப்பும் அத்தகைய சக்திகளின் அரசியல் நகர்வாகவே தெரிகிறது.

இரண்டு தரப்பினது வீழ்ச்சிக்கும் பின்னால் இந்து சமுத்திர அரசியல் அடிப்படையாகவே அமைந்துள்ளது. இந்து சமுத்திரத்தில் வலுவான தேசிய இனமாக ஈழத்தமிழர் அடையாளப் படுத்தப் பட்டாலும் அவர்களது இருப்பு ஒரு நூற்றாண்டு தோல்வியால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்கை கடந்து ஒரு வலுவான தேசிய இனமாக வாழ்ந்த ஈழத்தமிழர் வடக்கிலும் கிழக்கிலும் சில பகுதிகளுக்குள் தற்போது சுருக்கப்பட்டுள்ளனர். ஈழத் தமிழர் படிப்படியாக நிலத்தை இழந்து வரும் மக்கள் கூட்டமாக மாறி வருகின்றனர். நிலமே ஒரு மக்கள் கூட்டத்தின் தேசிய இருப்பின் அடையாளமாகும். இந்து சமுத்திர அரசியலுக்குள் ஈழத்தமிழரது இருப்பு கரைந்து போவதென்பது தனித்து ஈழத்தமிழருக்கு மட்டும் அபாயமானதல்ல. அது முழு இந்தியாவுக்கும் ஆபத்தானதாக அமைய வாய்ப்புள்ளது. அதனை நோக்கியே இந்து சமுத்திர அரசியல் நகர்கிறது. ஈழத்தமிழர் முழுமையாக தோற்கடிக்கப் படுவார்களாயின் இலங்கைத் தீவு பிற வல்லரசுகளது இருப்பின் மையமாகும். அது இந்து சமுத்திரத்தின் மீதான பிற சக்திகளது ஆதிக்கத்தை மட்டுமல்ல இந்திய துணைக் கண்டத்தையோ துண்டுகளாக ஆக்க வழிவகுக்கும். இக் கட்டுரையும் இந்து சமுத்திர அரசியலில் மீண்டும் அரங்கேறியுள்ள ஈழத் தமிழரது அரசியல் பிரச்சினைக்கான அரசியல தீர்வு பற்றிய உரையாடலில் மத்தியஸ்தராக மறைமுகமாக இயங்கும் நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூது வரும் தற்போதைய காலநிலைக்கான ஜனாநிபதி ஆலோசகரான எரிக சொல்ஹேய்மின் பங்கினைத் தேடுவதாக அமையவுள்ளது.

இலங்கைத் தீவு தற்போது இந்நியா, சீனா மற்றும் அமெரிக்கா உட்பட்ட குவாட் நாடுகளது ஆடுகளமாக உள்ளது. அத்தகைய ஆடுகளத்தின் மைய இலக்கு இந்து சமுத்திரம் மீதான போட்டியாகவே தெரிகிறது. இதில் எரிக் சொல்ஹெய்ம் 2001இல் தரையிறக்கம் செய்யப்பட்டது போல் தற்போது தரையிறக்கம் செய்யப்பட்டதாகவே தெரிகிறது.

இலங்கைத்தீவின் அரசியலை தீர்மானிக்கும் நிறன் மேற்குலகத்திற்கா, சீனாவுக்கா என்ற போட்டியின் பிரதிமையாகவே எரிக் சொல்ஹெய்மின் நகர்வு அமைந்துள்ளது. அதற்கான ஆதாரங்களைத் தேடுவது அவசியமானது.

முதலாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை சந்நித்த போது, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளை பாதுகாப்பதற்கு தேவையான அனைத்தையும் மேற்கொள்வேன் என எரிக் சொல்ஹெய்ம் உறுதியளித்தார். எரிக் சொல் ஹெய்ம் இலங்கைக்கான கடந்த வருகையின் போது (அக்டோபர் 10–13 வரை) இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிக்கு மத்தியஸ்தம் வகிக்கப் போவதாக தெரிவித்திருந்தார். அதே நேரம் அவரது பார்வையில் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு சமஷ்டி என்பதை நோர்வேயிலுள்ள தமிழர் தரப்புகளிடம் தெரிவித்ததாக தகவல்கள் உண்டு. அத்தகைய தமிழர் தரப்புகளின் சமஷ்டி பற்றிய வாதங்களை முன்னிறுத்தப்பட வாய்ப்பு அதிகமுள்ளதாகவே அத்தகைய புலம் பெயர்ந்த தரப்புகள் கருதுகின்றன. தற்போதுள்ள ஈழத்தமிழரது அரசியல் வறுமைக்குப் பின்னாலுள்ள சூழலை உருவாக்குவதில் நோர்வேக்கும் அதன் சமாதானத் தூதுவருக்கும் பங்குண்டு என்பதை மறுக்க முடியாது. முள்ளிவாய்க்கால் வரையும் ஈழத்தமிழர் விரட்டப்படுவதற்கும் அதன் அழிவுகளுக்கும் ஏதோவொரு அடிப்படையில் நோர்வேக்கும் அதன் நட்பு சக்திகளுக்கும் பங்கிருந்தது என்பதை மறுக்க முடியாது. விடுதலைப் புலிகளின் காலத்தில் முன்வைக்காத உறுதிமொழி எதனையும் தற்போது எரிக் சொல்ஹெய்ம் முன்வைக்கவில்லை என்பதை தமிழ்த் தரப்பு உணர வேண்டியது அவசியமானது. பேச்சுவார்ததை எவ்வளவு எச்சரிக்கையானதோ அதேயளவுக்கு எரிக் சொல்ஹெய்ம் எச்சரிக்கைக் குரியவராகவே உள்ளார். எனவே அவரது உறுதிமொழிகள் மீது எச்சரிக்கையாக இருததல் வேண்டுமே அன்றி நம்பிக்கை கொள்வது எந்தவிதத்திலும் பொருத்தமானதல்ல.

இரண்டாவது, இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிக்கு நேரடி மத்தியஸ்தராக வருகை தராது ஏன் மறைமுகமான மத்தியஸ்தராக ஈடுபாடு காட்டுகின்றார்? அதிலும் சர்வதேச காலநிலை ஆலோசகராக ஜனாதிபதியின் நியமனமாக வந்துள்ள எரிக் சொல்ஹெய்ம் ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்துள்ளார்? ஏன் உறுதிமொழிகளை வழங்குகின்றார்? என்பதேடி பிரதான கேள்வியாகும்.

அவ்வாறாயின் எரிக் சொல் ஹெய்ம் ஏதோவொரு நோக்கத்துடன் நகர்ந்துள்ளார். இலங்கைத்தீவினது இருப்பு மேற்குலகத்தினது கட்டுப் பாட்டுக்குள் அமைவதன் மூலம் மேற்கு இந்து சமுத்திரத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியுமென்பதை கோடுகாட்ட முடியும். ஏற்கனவே ஸ்கன்டிநேவிய நாடுகள் மீதான அணுகுமுறையை முன்னிறுத்திக் கொண்டு மத்தியஸ்தராக இயங்கியவர் எரிக் சொல்ஹொய்ம். தற்போது அத்தகைய பெரும் செயலும் ஈழத் தமிழரால் ஏற்றுக் கொள்ளப்படமுடியாததாகியுள்ள நிலையிலேயே இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகராக வருகை தந்துள்ளார்.

அப்போது விடுதலைப் புலிகள் பயன்படுத்தப்பட்டது போல தமிழித் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்தப்படப் போவதாகவே தெரிகிறது. மாறாக இதனை அடையாளம் கண்டு கொண்டு தமிழ்த் தரப்பு நகருமாயின் எரிக் சொல்ஹெய்மின் முயற்சியை ஈழத்தமிழருக்கு சாதகமானதாகவும் வாய்ப்பானதாகவும் மாற்றிக்கொள்ள முடியும். காரணம் ஈழத்தமிழரது நிலமும் இருப்பும். மேற்குக்கும் இந்தியாவுக்கும் அவசியமாகத தெரிகிறது. சீனா தென்னிலங்கையை தமது செல்வாக்குக்குள் கொண்டு வந்த பிற்பாடு வடக்குக்கு கிழக்காவது மேற்குலகிடமும் இந்தியாவிடமும் இருப்பது அவசியமானது. அதுவே இரு தரப்பினது சமநிலையை தீர்மானிக்கும் அரசியலாக அமையும். அதற்காக குவாட் நாடுகள் தென்னிலங்கையை கைவிட்டு விட்டதாலோ ஈழத்தமிழருக்கு முழுமையான ஆதரவு சக்திகளாக இயங்கப் போகின்றன என்று அர்த்தமாகாது. மாறாக இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வதே அதனடிப்படையாகும்.

மூன்றாவது, எதிர்ககட்சித் தலைவரை சந்தித்த போது புதுப்பிக்கத்தக்க புரட்சியில் இலங்கைக்கான வாய்ப்புகள் குறித்து தாம் சஜித் பிரேமதாசவுடன் விவாதித்ததாக சமூக வலைதளத்தில் எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார்.

அரகலய போராட்டத்தின் போது மேற்குலகத்தின் நிதியீட்டங்களும் ஆலோசனைகளும் இருந்ததாக அப்போது ராஜபக்ஷ தரப்பு குற்றம் சாட்டியது. அதனடிப்படையில் அவதானித்தால் அத்தகைய போராட்டமே இன்றைய அரசியல் சூழலை சாததியப்படுத்தியது. அதன் மூலம் இலங்கைத்தீவில் மையங் கொண்டுள்ள சீனாவின் ஆதரவாளர்களை கலைத்து விட்டு மேற்கின் விசுவாசிகளை ஆட்சியில் நிறுத்த முடிந்தது. அத்தகைய ஆட்சியின் இருப்பு மட்டுமே மேற்குலகம் அல்லது குவாட் அமைப்பின் நவன்களைப் பாதுகாக்க முடியுமென மேற்கு கருதுகிறது. அதற்காகவே ஜனாதிபதித் தேர்தல் பற்றிய உரையாடல்களும் அதற்கான ஆதரவுத் தளம் பற்றிய வாய்ப்புகளை முதன்மைப்படுத்துவதுமாக நிகழ்வுகள் அரங்கேறி வருகின்றன. தமிழ் மக்களது வாக்குகளை முழுமையாக கைப்பற்றுவதற்கான நகர்வுகள் ஒரு பக்கம் அமைய, மறு பக்கத்தில் தமிழர்களது பொருளாதாரத் திறன்களை பயன் படுத்திக்கொள்ளவும் முயற்சி காணப்படுகின்றன. இதற்கு அமைவாகவே தமிழர் விடயங்கள் கையாளப்படுகின்றன.

நான்காவது, எரிக் சொல்ஹெய்ம் தான் மத்தியஸ்தம் வகிக்கப் போவதில்லை எனவும் தமிழ்த் தரப்பினை சந்தித்த போதும் எதிர்க்கட்சியினரை சந்நித்த போதும் சுற்றுச்சூழல் சார்ந்து பேசியதாகவும் குறிப்பிடுகின்றார். ஆனால் அதற்கான தகவல் எதுவும் வெளியாகாத பொது தமிழ் அரசியல் தலைமைகள் தற்போது சுற்றுச் சூழலில் கவனம் கொண்டுள்ளார்கள் என்ற செய்தி தமிழ் மக்களுக்கு தெரியாதுள்ளது என்பது கவலைக் கிடமானதாக அமைந்துள்ளது.(22ம் பக்கம் பார்க்க)


சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இனுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# மீண்டும் எரிக்சொல்ஹெய்ம்?

கடந்த ஒக்டோபர் மாதம் கொழும்பு வந்து கிட்டத்தட்ட ஒரு வாரம் வரை தங்கியிருந்து விட்டுச் சென்ற எரிக் சொல்ஹெய்ம், கடந்த வாரம் மீண்டும் இலங்கைக்கு வந்திருந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரிலேயே தாம் கொழும்பு வந்ததாக அவர் கூறியிருந்தார்.

இந்த முறை அவர் கொழும்பு வந்திருப்பதற்கும் காலநிலை மாற்றம் தொடர்பாக அவருக்கு வழங்கப்பட்ட பதவிக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த ஒக்டோபர் மாதம் அவரை அழைத்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க, காலநிலை தொடர்பான, ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகராக நியமித்திருந்தார். கூடவே மாலைதீவின் சபாநாயகர் முஹமட் நஸீட்டையும் தனது ஆலோசகராக ஜனாதிபதி ரணில் நியமித்திருந்தார். காலநிலை தொடர்பான ஆலோசனைகளுக்கு ஏன் எரிக் சொல்ஹெய்ம், அவருக்கு ஏன் வெளிநாட்டு நாணயத்தில் ஊதியம் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் அப்போது கேள்விகள் எழுப்பப்பட்டன.

அதற்கு எரிக் சொல்ஹெய்ம், தாம் ஊதியத்துக்காக பணியாற்றவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். எரிக் சொல்ஹெய்மும், ரணில் விக்கிரமசிங்கவும் பழைய நண்பர்கள். 2001ஆம் ஆண்டு, விடுதலைப் புலிகளுக்கும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கும் இடையில் போர் நிறுத்தம் மற்றும் அமைதிப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்காக நோர்வே அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட சிறப்புத் தூதுவர் அவர்.

அந்த அமைதி முயற்சியில் எரிக் சொல்ஹெய்மின் வகிபாகம் குறித்த சந்தேகங்கள் இரண்டு தரப்பிலும் காணப்பட்டது. அமைதி முயற்சிகளைக் குழப்புவதற்கு முயன்ற சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள், அவரைப் புலிகளின் ஆதரவாளராகச் சித்தரித்தன. வரிப்புலி சீருடையுடன் அவரது படங்கள் கொழும்பு நகரெங்கும் ஒட்டப்பட்டு, அவருக்கு எதிரான கருத்து சிங்கள மக்கள் மத்தியில் ஆழமாக விதைக்கப்பட்டது.

எரிக் சொல்ஹெய்மும் நோர்வேயும் நாட்டைப் பிளவுபடுத்த முயல்வதாக, புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது. அதே வேளை, தமிழ் மக்கள் மத்தியிலும், எரிக் சொல்ஹெய்ம் அமைதி முயற்சி என்ற பெயரில் தமிழர் தரப்பை ஆபத்தான பொறிக்குள் தள்ளிச் செல்கிறார் என்ற கருத்தும் காணப்பட்டது.

அந்த அமைதி முயற்சியின் முடிவில், ஆரம்பித்த போர், தமிழர் தரப்புக்கு பேரழிவைக் கொடுத்தது. இன்று வரை இட்டு நிரப்ப முடியாத தலைமைத்துவ வெற்றிடத்தையும் அது ஏற்படுத்தியது. அதனால் எரிக் சொல்ஹெய்ம் தான், தமிழர்களை தவறான வழிக்கு இட்டுச் சென்றார் என்ற கருத்து இன்னமும் பலரிடம் காணப்படுகிறது.

எரிக் சொல்ஹெய்ம் இலங்கை அமைதி முயற்சிகளுக்குப் பின்னர், நோர்வே அரசியலிலும் பின்னர் ஐ.நா பணிகளிலும் ஈடுபட்டு விட்டு இப்போது விலகியிருக்கிறார்.

இவ்வாறான நிலையில் தான், அவரை ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அழைத்து வந்திருக்கிறார். அழைத்து முதலில் அவரை வந்த போது காலநிலை மாற்றம் பற்றிய ஆலோசனைகளை வழங்குவதற்கு வந்தார் என்று கூறப்பட்டது. இப்போது அவர் மீண்டும் வந்திருக்கிறார். ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரிலேயே வந்ததாக கூறியிருக்கிறார் எரிக் சொல்ஹெய்ம்.

வந்தவுடன் அவர் மனோ கணேசனைச் சந்தித்தார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தமிழ்த் தேசியப் பிரேமதாசவையும், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனையும் சந்தித்திருக்கிறார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தரப்பினருடனும் பேச்சுக்களை முன்னெடுத்திருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரை, எரிக் சொல்ஹெய்ம் சந்திக்க விரும்பியே அந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. காலநிலை மாற்றம் குறித்து ஆலோசனை வழங்க வந்ததாக முதலில் கூறப்பட்ட எரிக் சொல்ஹெய்ம் இந்தமுறை வந்தவுடன் காலநிலை மாற்றத்துக்கு ஏற்ற பசுமை முதலீடுகளை கொண்டு வருவது குறித்து பேச்சு நடத்த வந்திருப்பதாக கூறப்பட்டது.



ஆனால் அவர் கொழும்பில் நடத்தியிருக்கும் சந்திப்புகளும் பேச்சுக்களும், அரசியல் விவகாரங்களை ஒட்டியதாக காணப்படுகிறது. அண்மையில் இட

சிங்கள மக்களிடம் இருந்து எந்த எதிர்ப்பும் வராத நிலையில் எரிக் சொல்ஹெய்மையே அவர்கள் பெரிதும் கண்டு கொள்ளாத நிலையில், மெதுவாக தனது வேடத்தைக் கலைக்கத் தொடங்கியிருக்கலாம்.

இந்த முறை அவர் சிங்களத் தலைவர்களிடம், தயங்கித் தயங்கிச் செல்ல வேண்டிய நிலை இருக்கவில்லை. 'வெளியே போ' என்று நோர்வேயின் கழுத்தைப் பிடித்து தள்ளிய மஹிந்த ராஜபக்ஷவே, கடந்த முறை வந்திருந்த எரிக் சொல் ஹெய்மை சிரித்துக் கொண்டு வரவேற்றிருந்தார். காரணம், எரிக்சொல்ஹெய்மின் அமைதி முயற்சி, சிங்களத் தரப்பினருக்கு சாதகமான

தமிழர் தரப்புடன் சொல்ஹெய்ம் இப்போது மெதுவாக ஊடாடத் தொடங்கியிருக்கிறார்.

அவரது இந்த முறை கொழும்பு பயணம், பேச்சுவார்த்தை என்பன அவரது ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைத் தீர்வு என்று உறுதி கொடுத்திருக்கிறார். இரா.சம்பந்தன் முன்னர் தீபாவளிக்குள் தீர்வு வரும் என்றும், பொங்கலுக்குள் தீர்வு வரும் என்றும் குறிப்பிட்டு வெளியிட்ட அறிக்கைகள் இன்று வரை பரிகாசம் செய்யப்பட்டு வருகிறது.

அது போல, ரணில் விக்கிரமசிங்கவின் சுதந்திர தினத்துக்குள் தீர்வு வரும் என்ற வாக்குறுதியின் நிலையும்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



என்னவாகும் என்ற கேள்விகள் உள்ள நிலையில் சொல்ஹெய்மும் இதற்குள் காலடி எடுத்து வைக்க முனைகிறார். தமிழர் தரப்பு அவரை வேண்டி விரும்பி அழைத்து வரவில்லை. அத்தகைய துணிச்சல் யாருக்கும் இல்லை. அரசுடனான பேச்சுக்கள் சர்வதேச மத்தியஸ்தம், இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் தான் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமிழர் தரப்பில் வலியுறுத்தப்படும் நிலையில் தான், எரிக் சொல்ஹெய்மின் உள்நுழைவு அரங்கேறுகிறது.

இது சர்வதேச தலையீடு அல்லது

த்தை வரவேற்றுக் கருத்து வெளியிட்டிருக்கும் அவர், இனப்பிரச்சினைத் தீர்வு நடந்த சர்வகட்சி கூட்ட முயற்சிகள் குறித்தும் பேச்சுக்களை முன்னெடுத்திருக்கிறார்.

அவரது உண்மையான இலக்கு காலநிலை தொடர்பான விடயங்களுக்கு அப்பாற்பட்டதாக அரசியல் விவகாரங்களுடன் தொடர்புடையதாகவே விளங்கிக் கொள்ள முடிகிறது. எதற்காக ஆரம்பத்திலேயே ரணில் விக்கிரமசிங்க, எரிக் சொல்ஹெய்மை களமிறக்கிய போது இந்த விடயத்தை வெளிப்படுத்தவில்லை? எரிக் சொல்ஹெய்ம் தொடர்பான எதிர் மறையான விம்பம் ஒன்று சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டிருப்பது ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரியாத ஒன்றல்ல.

நோர்வேயின் அமைதி முயற்சிகளைக் குழப்புவதற்காக, அப்போது ஜே.வி.பி.யும், ஜாதிக ஹெல உறுமயவும் அந்த வேலையை கனகச்சிதமாக முன்னெடுத்திருந்தன.

அப்போது ஜே.வி.பியில் இருந்த விமல் வீரவன்ச, ஜாதிக ஹெல உறுமயவில் இருந்த அதுரலியே ரத்தன தேரர், சம்பிக்க ரணவக்க, உதய கம்மன்பில, எல்லாவெல மேதானந்த தேரர் போன்றவர்கள், எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வேக்கு எதிராக மிகமோசமான கீழ்த்தரமான பிரசாரங்களை முன்னெடுத்திருந்தனர். அந்தப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டது கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு முன்னர். ஆனாலும் அதனை சிங்கள மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அப்போது புலிகளுடன் பேச்சு நடத்திய ரணில் விக்கிரமசிங்கவையும் அவர்கள் கடுமையாக விமர்சித்தனர். இவ்வாறான நிலையில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் மீண்டும் எரிக் சொல்ஹெய்மை அழைத்து வருகிறார் என்றதும், சிங்கள மக்கள் குழம்பிப் போவார்கள். ஆழம் தெரியாமல் காலை விடக் கூடாது என்பதால், ஆழம் பார்க்கும் முயற்சியாகவே, காலநிலை தொடர்பான ஆலோசகராக எரிக் சொல்ஹெய்ம் நியமிக்கப்பட்டிருக்கலாம்.



விளைவுகளையே ஏற்படுத்தியிருந்தது.

அரசியல் ரீதியாக ராஜபக்ஷவினரைப் பலப்படுத்தி, கிட்டத்தட்ட அவர்கள் அதிகாரம் செலுத்துவதற்கு வழியை ஏற்படுத்தியது. அத்துடன், போரை முன்னெடுத்து விடுதலைப் புலிகளை ஓரம் கட்டி ஒழித்துக் கட்டவும் வழி வகுத்துக் கொடுத்தது. இந்த இரண்டுக்கும் காரணமாக அமைந்தது, எரிக் சொல்ஹெய்ம் முன்னெடுத்த அமைதிப் பேச்சுக்கள் தான்.

ஆரம்பத்தில் சிங்கள மக்கள் நோர்வேயையும் சொல்ஹெய்மையும் வெறுப்புடன் பார்த்ததற்கும் இப்போது அவரை கண்டு கொள்ளாமல் இருப்பதற்கும் அதுவே காரணம். இந்த கட்டத்தில்

கண்காணிப்பை தவிர்ப்பதற்கான, தடுப்பதற்கான சிங்கள அரசியல் சக்திகளின் உத்தியாக இருக்குமா என்ற சந்தேகங்கள் உள்ளன. எவ்வாறாயினும் தாம் மத்தியஸ்தம் வகிக்கப் போவதில்லை என எரிக் சொல்ஹெய்ம் கூறியிருந்தாலும், அது எந்தளவுக்கு உண்மையானதென்ற சந்தேகம் உள்ளது.

விடுதலைப் புலிகளின் காலத்தில் எரிக் சொல்ஹெய்ம் அமைதி முயற்சிகளில் எத்தகைய வகிபாகத்தை கொண்டிருந்தார் என்ற கேள்விகளுக்கு அப்பால், இப்போது அவர் விடயத்தில் தமிழர் தரப்பு முன்னெச்சரிக்கையாகவே இருந்து கொள்ளும். ஏனென்றால், அவர்கள் சூடு கண்ட பூனைகளல்லவா?

3வது ஆண்டு நினைவஞ்சலி




திருமதி பரஞ்சோதி சிவானந்தன்


கட்டுவன் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரஞ்சோதி சிவானந்தன் அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பரஞ்சோதி சிவானந்தன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

EELANADU 30 Dec 2022 ஈழநாடு

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! தடைபட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.. உடல் நலம் சீரடையும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்




ரிஷபராசி அன்பர்களே! வீண் மனகு ழப்பம் ஏற்பட்டு நீங்கும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் வியாபாரத்தில் கூடுதல் லாபம் பெற முடியும். உத்யோகத்தில் கூடுதல் பணிச்சுமையும், வீண் அலைச்சலும் உண்டாகும். சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தினருடன் சில்லறை சண்டைகள் உண்டாகலாம்.




மிதுனராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் குறித்த காலத்தில் வெற்றி பெறும். மனம் ஒருநிலைப்படும். கவுரவம், அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் மற்றவர்கள் மூலம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மந்தமானபோக்கு காணப்பட்டாலும் பணவரத்து குறைவு இருக்காது.தொழிலில் கூட்டாளிகளுடன் அனுசரித் செல்வது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.




கடகராசி அன்பர்களே! மனோதைரியம் அதிகரிக்கும். எல்லா காரியங்களும் சாதகமாக நடந்து முடியும். எல்லா இடங்களிலும் மரியாதையும், கவுரவமும் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். போட்டிகள் குறையும். தொழில் தொடர்பான தகராறுகள் நீங்கும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகத் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும்.



சிங்கராசி அன்பர்களே! மன குழப்பம் நீங்கும். மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கவுரவம் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளை கவனமாக செய்து முடித்து பாராட்டு பெறுவர்.



கன்னிராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கும். தர்மசிந்தனை அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்படையும். புதிய ஆர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள். வியாபார வளர்ச்சிக்கு இருந்த தடைகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசாங்கம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக முடியும். உத்யோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். பணியாளர்கள் உதவியும் கிடைக்கும்




துலாம்ராசி அன்பர்களே! சுபச் செலவுகள் கூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். துணிச்சல் உண்டாகும். எதை பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் சரக்குகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும்.



விருச்சிகராசி அன்பர்களே! மன நிம்மதி கிடைக்கும். புத்திசாதுர்யம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். புதிய ஆர்டர்கள் பெறவும், வாடிக்கையாளர்களை திருப்தி செய்யவும் அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும் போது மிகவும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.







தனுசுராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பம் நீங்கும். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாட்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும்.



மகரராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்டு செயல்படுத்துவது வளர்ச்சிக்கு உதவும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும். எதை பற்றியும் கவலைப்படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அவசரப்படாமல் இருப்பது நல்லது. தன்மையாக பேசுவது நல்லது.



கும்பராசி அன்பர்களே! சுபச் செலவுகள் உண்டாகும். வியாபாரம் தொடர்பான கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது.



மீனராசி அன்பர்களே! எல்லாவிதமான முன்னேற்றமும் ஏற்படும். பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறன் அதிகரிக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

## பேச்சுவார்த்தையில் தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள்?

(5ம் பக்கத் தொடர்ச்சி) சார்ந்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றன. இந்த அரசாங்கத்துடனான பேச்சில் புலம்பெயர் அமைப்புக்கள் பங்கு கொள்ள வேண்டுமென்று விரும்புவதானது புலம்பெயர் அமைப்புக்கள் மத்தியில் சிந்தனை மாற்றமொன்று ஏற்பட்டிருப்பதன் பிரதிபலிப்பா?

ஆனாலும் தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் பேச்சில் நேரடியாக பங்குகொள்வதென்பது நடைமுறையில் சிக்கலானது. மேலும் ஒரு வேளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் கூட, எந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கு கொள்வதென்னும் விவாதம் ஆரம்பிக்கும். ஏனெனில், தமிழ் புலம்பெயர் சமூகத்தை பல அமைப்புக்கள் பிரதிநித்துவம் செய்கின்றன. இவர்களுக்கிடையில் கருத்தொருமித்த நிலைப்பாடுகள் இல்லை. இதனையும் அரசாங்கம் அறியும். எனவே முதலில் தமிழ் புலம்பெயர் சமூகமானது, இலங்கை அரசாங்கத்துடன் வெளிப்படையாக உரையாடுவது தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்

## இனப்பிரச்சனைக்கான தீர்வு முயற்சியும்

(20ம் பக்கத் தொடர்ச்சி) மலையக முற் போக்கு முன்னணியின் தலைமையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் எதிர்க்கட்சித் தலைமையும் சுற்றுச் சூழலில் ஈடுபாடு காட்டுகிறார்கள் என்பது தற்போதைய இலங்கைத்தீவின் அரசியலின் துயரமொன்றாகவே உள்ளது. இத்தகைய உண்மையை வெளிப்படுத்தியதற்கு எரிக சொல்லோய்முக்கு இலங்கைத் தீவு மக்கள் பாராட்டு தெரிவிப்பார்களா என்பது சந்தேகமே. இப்படி ஏமாற்றுவதை விட அவர் வேறு ஏதாவது செயலைப் வெளிப்படுத்தியிருக்க முடியும்.

எனவே எரிக் சொல்ஹெய்மின் நகர்வு முழுவதும் ஈழத்தமிழரது அரசியலை முன்னிறுத்திக் கொண்டு இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான அணுகுமுறையாகவே தெரிகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மக்களால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஆக்குவதுடன், அடுத்து வரும் ஆட்சிக் காலப் பகுதிக்கு இலங்கைத்தீவில் மேற்குலக் நட்பு சகதியை பலப்படுத்துவதே பிரதான நகர்வாகத் தெரிகிறது. அதற்காக பயன்படுத்தப்படும் தேசிய இனமாக ஈழத் தமிழர்கள் விளங்குகின்ற துயரம் தவிர்க்க முடியாததாக மாறியுள்ளது.

இத்தகைய பின்னணிக் குள்ளேயே ஈழத் தமிழரது அரசியல் தீர்வுக்கான உரையாடலின் தனித்துவம் முக்கியத்துவம் பெறுவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. அது ஈழத்தமிழரது அரசியலுக்கான தீர்வாக இல்லாது இந்து சமுத்திரத்திற்கான வல்லரசுகளது போட்டிக்கான களமாகவே தெரிகிறது.

## எந்த மருந்தும் பலன் அளிக்காது! ரஷ்ய ஜனாதிபதி குறித்து அதிர்ச்சி தகவல்



விளாடிமிர் புடின் ரஷ்ய ஜனாதிபதியாக பொறுப்பில் இருப்பது இது தான் இறுதி ஆண்டு எனவும், எந்த மருந்தும் கடைசி வரையில் பலனை அளிக்காது எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினிக்கு மேற்கத்திய நாடுகளின் சிறப்பு மருத்துவர்கள் குழுவால் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது சிறப்பு மருந்துகளால் மட்டுமே அவர் உயிருடன் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

உக்ரைன் தொடர்பான போருக்கு பின்னர் மேற்கத்திய நாடுகள் அனைத்தும் ரஷ்யாவுக்கு எதிராக தடைகள் விதித்திருந்தும், ரகசியமாக அவர் வெளிநாட்டு மருத்துவர்களின் சிகிச்சையை நாடியுள்ளதாகவே தகவல் வெளியாகியுள்ளது.

புற்றுநோயால் அவதிப்பட்டு வரும் விளாடிமிர் புடினுக்கு தற்போது உலகின் சிறந்த சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், இதுவே அவரது கடைசி கட்டம் எனவும், ஆட்சிப்பொறுப்பில் இருந்து மிக விரைவில் அவர் வெளியேறுவார் எனவும் கூறப்படுகிறது.

ரஷ்யாவில் இதுவரை அறிமுகமாகாத சிறப்பு சிகிச்சை அவருக்கு அளிக்கப்பட்டு வருவதாக கூறும் மருத்துவர் ஒருவர், உண்மையில் அந்த சிகிச்சையால் மட்டுமே புடின் தற்போது பொது வாழ்க்கையில் நீடித்து வருகிறார் என குறிப்பிட்டுள்ளார்.

இறுதிகட்டம் நெருங்கி வருவதை உணர்ந்த பின்னரும், அவருக்கு சிகிச்சை தொடர்ந்து அளிக்கப்பட்டு வந்தாலும், கடைசி வரையில் எந்த மருந்தும் பலன் தராது என்றே அவர் கூறுகிறார்.

புடின் ஜனாதிபதி பொறுப்பில் இருந்து வெளியேற முடிவு செய்தால், தற்போதைய வேளாண் அமைச்சர் **Dmitry Patrushev** இடம் அதிகாரத்தை ஒப்படைப்பார் என்றே கூறப்படுகிறது. இன்னொருவர், தனது முன்னாள் பாதுகாவலரான 50 வயது **Alexei Dyumin** என்பவரும் பட்டியலில் இருக்கிறார் என கூறுகின்றனர்.

முன்னதாக, இஸ்ரேல் மருத்துவர்களின் கண்காணிப்பில், உயிர் காக்கும் சிகிச்சையில் புடின் உள்ளார் என தகவல் வெளியானது. ஆனால் இஸ்ரேல் மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சை அளிப்பது உறுதி செய்யப்படவில்லை என்றாலும், வெளிநாட்டு மருத்துவர்கள் என்றே கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க அமெரிக்க நாடாளுமன்றத்தில் பேசிய உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, நாங்கள் ஒரு போதும் சரணடைய மாட்டோம் என சபதமிட்டார். அமெரிக்கா சென்ற உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்து பேசினார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் பேசிய உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, நாங்கள் ஒருபோதும் சரணடைய மாட்டோம் என சபதமிட்டார். அமெரிக்கா சென்ற உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்து பேசினார்.

அப்போது ஜோ பைடன் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியிடம், 'இந்த பயங்கரமான நெருக்கடியில் உங்கள் தலைமை மற்றும் நீங்கள் செய்திருக்கும் செயல்கள் உக்ரைன் மக்களை மட்டுமன்றி அமெரிக்க மக்களையும், ஒட்டுமொத்த உலகையும் ஈர்த்துள்ளது' என தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து ஜெலென்ஸ்கி பேசும் போது, 'எங்களுக்கு அமைதி வேண்டும் என்றார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• RESP
• Disability
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.